# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 89 — 1973 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.12.07

89 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 939 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. .. | — |
| அரசாங்க சேவை குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | 955 |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | 940 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 960 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 943 | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 943 | | |


*கவனிக்க.—பொலிஸ் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 555

எண் : டி./வி. எஃவ்/30 (ii)

**தரைப்படை—இலங். தொ. ப.—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனந்துறத்தலும் இளைப்பாறலும்**

(அ) **நியமனந்துறத்தல்**

லெஃவ்ரினன்ற்-கேணல் ஆனந்த தெலிக்கட பள்ளகே, ஈ. டி., சி. ஏ. எஸ். சி. அவர்கள், 1973, ஒற்ரோபர் 01 ஆம் திகதி முதல் இலங்கைத் தொண்டர் சேவைச் சிறப்பணி (தொண்டர் படை) இன் கொமாண்டிங் ஒபிசர் நியமனத்தைத் துறக்கிறார்.

(ஆ) **இளைப்பாறல்**

லெஃவ்ரினன்ற்-கேணல் ஆனந்த தெலிக்கட பன்னகே, ஈ டி., சி. ஏ. எஸ். சி. அவர்கள் 1973, ஒற்ரோபர் 01 ஆம் திகதி முதல் இலங்கைத் தொண்டர் படையிலிருந்து இளைப்பாறினார்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு நவெம்பர் மீ 19 ந உ.

12-177—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

1973 இன் இல. 556

*எண் : டி./வி. எஃவ்/5' (அ)*

***தரைப்படை—இலங்கைத் தொண்டர் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற இளைப்பாறல்/அரசாணைமர்வு, சேவைக்கென நியமித்தல் முதலியன***

*(அ) இளைப்பாறல்*

*இலங்கைத் தொண்டர் படையிலிருந்து, 1973, நவெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் கப்ரின் (குவாட்டர்மாஸ்ரர்) மகாவிதானகே பியசேன குணவர்த்தன அவர்கள் இளைப்பாறுதலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளார்.*

*(ஆ) அரசாணையமர்வும் சேவைக்கென நியமித்தலும்*

*கீழ்க்குறிப்பிடப்பெற்ற உவாறன்ற் ஒபிசரை தரைப்படையின் இலங்கைத் தொண்டர் படையில் ஒரு லெஃவ்ரினன்ற் (குவாட்டர் மாஸ்ரர்) (பொதுக்கடமைகள்) ஆக அரசாணையமர்வு செய்தலையும், 1973, நவெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் கைமுனு காவற் படையின் 3 ஆம் (தொண்டர்) பட்டாளத்திற் சேவைக்கென அன்னாரை நியமித்தலையும் அங்கீகரித்தலில் அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார் :*

*எஸ்/3 உவாறன்ற் ஒபிசர் II ஜோர்ஜ் விக்ரர் நாணயக்கார,*

*அதி உத்தமனாரின் ஆணைப்படி,*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1973, நவெம்பர் 9 ஆம் திகதி.*

12-34—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*எல். டபிள்யு. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு.*
*1972 ம் ஆடு மே மீ 05 ந உ.*

1973 இன் இல. 557

எண் : டி./வி.எஃவ்/9/அ (ii).

**தரைப்படை—இலங். தொ. ப.—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றம்**

1973, சனவரி 1 ஆம் திகதி முதல் கப்ரின் (குவாட்டர் மாஸ்ரர்) (பொதுக் கடமைகள்) ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற் (குவாட்டர் மாஸ்ரர்) சைமன் கன்னங்கர, சி. ஏ. எஸ். சி.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நவெம்பர் 9 ஆம் திகதி.

12-33—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

1973 இன் இல. 558

எண் : டி/வி. எஃவ்/18 (அ)

**இலங்கை கடற்படை—நிரந்தர கடற்படை ஒதுக்கு—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்**

இலங்கைக் கடற்படையின் நிரந்தர கடற்படை ஒதுக்கினைச் சேர்ந்த கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, ஒற்றோபர் 31 ஆம் திகதி முதல் அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் :

கொமாண்டர் டி. சி. இங்கிள்ற்றன், நிரந்தர கடற்படை ஒதுக்கு.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நவெம்பர் 6 ஆம் திகதி.

12-32—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

1973 இன் இல. 559

எண் : டி./வி. எஃவ்/18அ (iv).

**இலங்கைக் கடற்படை—நிரந்தர கடற்படை ஒதுக்கு—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்**

இலங்கைக் கடற்படையின் நிரந்தர கடற்படையைச் சேர்ந்த கீழ்க் குறிப்பிடப்பெற்ற அலுவலர், 1973, நவெம்பர் 1 ஆம் திகதி முதல் அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் :

லெஃவரினன்ற்-கொமாண்டர் எச். பி. பௌலஸ், நிரந்தர கடற்படை ஒதுக்கு.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நவெம்பர் 19 ஆம் திகதி.

12-36—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

1973 இன் இல. 560

எண் : டி. 252/ஆர். ஈ. சி. ரி. /3 (i)

**இலங்கை வான் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியேற்றங்கள்**

1973, யூலை 1 ஆம் திகதி முதல் சப்ஸ்ரன்ரிவ் ஸ்குவாட்றன்-லீடர் ஆகக் கடவர் :

ஃபிளைற்-லெஃவ்ரினன்ற் ஹொலுப்பத்திரகே கீர்த்திராஜ கல்தெரா, ஜி. டி/பைலற்.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 23 ந உ.

12-136—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

1973 இன் இல. 561

எண் : டி./வி. எஃவ்/75

**இலங்கைத் தொண்டர் வான் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர், 1973, பெப்புருவரி 28 ஆம் திகதி தொடக்கம், இலங்கைத் தொண்டர் வான்படையிலிருந்து அரசாணையமர்வு துறத்தலை அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார் :

ஃபிளையிங் ஒபிசர் கமகே பேர்ணாட் த சில்வா—(வி/0029), நிருவாக/ பேரணி.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 17 ந உ.

12-176—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 562

அரசியலமைப்பின் 126 (5) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையால் தமக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளரினால் செய்யப்பட்ட பதில் நியமனங்கள்

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| 1. திரு. கே. சி. ஈ. த அல்விஸ் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 நவம்பர் 14 லிருந்து | கொழும்பு மாவட்ட நீதிமன்ற 70334/எ இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| 2. திரு. எல். எச். ஜி. வீரசேகர .. | பதில் இணை நீதவான் முதலியன, நீர் கொழும்பு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 நவம்பர் 16 லிருந்து | நீர்கொழும்பு நீதிமன்ற 261/73 இலக்க ஆட்கொணர்கை வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |

| அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| 3. திரு. ஈ. எவ். டபிள்யு. த சில்வா | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, மாத்தறை | 1973 டிசம்பர் 7,8 | திரு. ஜே. எவ். எ. சோசா இல்லாத காலங்கள். |
| 4. திரு. ஈ. எவ். டபிள்யு. த சில்வா | ஷை .. .. | ஷை .. | திரு. டி. டபிள்யு. கே. லத்துவகெற்றி இல்லாத காலங்கள். |
| 5. திரு. எம். டபிள்யு. ஆர். த சில்வா | கண்டிப தில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, கம்பளை | 1973 நவம்பர் 9 லிருந்து 11 | திரு. ஆர். இளயபெருமா இல்லாத காலங்கள். |
| 6. திரு. எல். டபிள்யு. பெர்ணண்டோ | ஷை .. .. | 1973 நவம்பர் 5 .. | ஷை |
| 7. திரு. ஆர். விக்ரமசிங்க .. | பதில் இணை நீதவான் முதலியன, காலி .. | ஷை .. | திரு. எச். டபிள்யு. சேனனாயக்க இல்லாத காலம். |
| 8. திரு. ஜே. சி. ருஜரட்ணம் .. | நுவரெலியா பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, அட்டன் | 1973 ஒக்டோபர் 18, 19 | திரு. ஆர். எல். த சில்வா இல்லாத காலங்கள் |
| 9. திரு. ஜே. சி. ருஜரட்ணம் .. | ஷை .. .. | 1973 நவம்பர் 8 | திரு. எ. பி. அனுவிகார இல்லாத காலம். |
| 10. திரு. எஸ். ஆர். பி. எ. குணதிலக்க | பதில் இணை நீதவான் முதலியன, களுத்துறை | 1973 நவம்பர் 20, 21 | திரு. எ. சயிமன் சில்வா இல்லாத காலங்கள். |
| 11. திரு. எ. எல். எச். ரஜீன் .. | பதில் இணை நீதவான் முதலியன, அம்பாந்தோட்டை | 1973 நவம்பர் 8 | திரு. ரி. எச். வருசவிதான இல்லாத காலம் |
| 12. திரு. எம். ஒ. எம். தாகிர் .. | பதில் இணை நீதவான் முதலியன, குருணகல் | 1973 நவம்பர் 6, 7 | திரு. எம். எஸ். எஸ். கொரியா இல்லாத காலங்கள். |
| 13. திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம் | 1973 நவம்பர் 5 | திரு. கே. சி. ஈ. த அல்விஸ் இல்லாத காலம். |
| 14. திரு. எஸ். எம். அபூதாகிர் .. | பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1973 நவம்பர் 7.. | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலம். |
| 15. திரு. ஆர். எ. தென்னகோன் .. | குருணகல் பதில் இணை நீதவான் முதலியன, குளியாப்பிட்டி | 1973 நவம்பர் 7 .. | திரு. ஈ. பி. ரத்வத்த இல்லாத காலம் |
| 16. திரு. எம். எம். அலால்தீன் .. | அனுராதபுரம் பதில் இணை மாவட்ட நீதிபதி முதலியன, பொலனறுவை | 1973 நவம்பர் 5, 6 | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ன இல்லாத காலங்கள். |
| 17. திரு. எ. கேதீஸ்வரன் .. | பதில் இணை நீதவான் முதலியன, வவுனியா | 1973 நவம்பர் 9 லிருந்து 11 | திரு. எ. எம். ஐ. சாகீட் இல்லாத காலங்கள் |
| 18. திரு. எ. சிமாம்பிள்ளை .. | பதில் இணை நீதவான் முதலியன, மன்னார் | 1973 நவம்பர் 16 லிருந்து 19 | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள். |
| 19. திரு. பி. டி. பெர்ணன்டோ .. | பதில் தலைவர், தொழில்முறை மன்று, குறிப்பிட்ட வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு | 1973 நவம்பர் 26 | தொழில் முறை மன்று (16) ன் 16/436/69. |
| | | 1973 நவம்பர் 22, 23, 24 | தொழில் முறை மன்று (16) ன் 16/641/70 |
| 20. திரு. எம். ஜி. எச். த அல்விஸ் .. | ஷை .. .. | 1973 நவம்பர் 15.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/1274/69. |
| | | 1973 நவம்பர் 17.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/எ/462 லிருந்து 11/எ/464. |
| | | 1973 நவம்பர் 19.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/1004/69, 11/1008/69 லிருந்து 11/1010. |
| | | 1973 நவம்பர் 20.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/258/69. |
| | | 1973 நவம்பர் 21.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/எம்/962, 11/எம்/963, 11/எம்/1006, 11/எம்/1007. |
| | | 1973 நவம்பர் 22.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/எ/1239 |
| | | 1973 நவம்பர் 23, 28, 29 | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/1966/70, 11/1967/70. |
| | | 1973 நவம்பர் 26.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/எ/1813. |
| | | 1973 நவம்பர் 27.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/ஆர்/3057. |
| | | 1973 நவம்பர் 28.. | கொழும்பு தொழில் முறை மன்றின் 11/2246/71, 11/429/69. |
| 21. திருமதி எஸ். தர்மதாச .. | கடவத்தக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத் தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 டிசம்பர் 3 லிருந்து 15 தினங்கள் | பள்மதுள்ள ஊர் நீதிமன்ற 9377 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| 22. திரு. பி. டி. பி. விஜசேகர .. | புத்தளம்பத்து முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் இணைத் தலைவர், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 டிசம்பர் 27 லிருந்து 15 தினங்கள் | ஆனைமடுவ ஊர் நீதிமன்ற 8121 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு. |
| 23. திரு. எம். எஸ். அப்துள்ளா .. | குளியப்பிட்டி முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 ஒக்டோபர் 16 | திரு. கே. எஸ். குணதிலக்க இல்லாத காலம். |
| 24. திரு. எம். எஸ். அப்துள்ளா .. | கல்கமுவ முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 5, 7, 19 | அல்லது மறு அறிவித்தல் வரை. |
| 25. திரு. எ. எஸ். இகலகம .. | ஷை .. .. | 1973 நவம்பர் 6 | ஷை |
| 26. திரு. ரி. பி. தெலசிங்க .. | ஷை .. .. | 1973 நவம்பர் 1, 13, 16, 20, 30 | ஷை |

| | அலுவலர் பெயர் | பதில் நியமனம் | பதில் நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 27. | திரு. ஜி. சூரியஆராச்சி .. | கல்கமுவ முதலியவற்றின் ஊர்நிதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 2, 3, 8, 9, 12,14, 15, 17, 21 விருந்து 24, 26 விருந்து 29 | அல்லது மறு அறிவித்தல் வரை |
| 28. | திரு. யு. எல். எ. மஜீத் .. | பாணமைப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 1 விருந்து 3, 5 விருந்து 8, 19 விருந்து 24 | ஷை |
| 29. | திரு. எ. சி. ஜாபர் .. | ஷை .. .. | 1973 நவம்பர் 12 விருந்து 17, 26 விருந்து 30 | ஷை |
| 30. | செல்வி பி. ஆர். சமரஜீவ .. | வெள்ளபோடப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 5 விருந்து 9, 12 விருந்து 17, 19 விருந்து 21 | திரு. பி. ஓ. ஆர். விஜயதிலக இல்லாத காலம். |
| 31. | திரு. உபாலி கோதமுனே .. | கடவத்தக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 12 விருந்து 14 | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலங்கள். |
| 32. | திரு. எல். பி. கரவியட்ட .. | பாத தும்பர முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 12, 13 | திரு. ஜே. டபிள்யு. பி. உடலகம இல்லாத காலங்கள். |
| 33. | திரு. பி. டபிள்யு. அபேசிங்க | சீயன்னக்கோறளை கிழக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 16, 28 | திரு. டபிள்யு. பி. தசநாயக்க இல்லாத காலங்கள் |
| 34. | திரு. எஸ். லோகேஸ்வரன் .. | வலிகாமம் வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 1 விருந்து 3 | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலங்கள். |
| 35. | திரு. பி. சுந்தரலிங்கம் .. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 14 விருந்து 17 .. | திரு. சி. ஆர். குஜசிங்கம் இல்லாத காலங்கள். |
| 36. | திரு. பி. இயூ. அழகக்கோன் | அளுத்குருகோறளை முதலியவற்றின் ஊர் நீதிமனறப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 16, 17 | திரு. எம். எ. சி. த சில்வா இல்லாத காலஙகள். |
| 37. | திரு. ஆர். வி. வில்வராஜா .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமனறப் பதில் தலைவர் | 1973 ஒக்டோபர் 30, 31 | திரு. எஸ். குஜனுதன் இல்லாத காலங்கள். |
| 38. | திரு. எ. பி. எச். த அல்விஸ் | கங்கபோடபத்து முதலியவற்றின் ஊர் நீதிமனறப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 28 | திரு. எவ். ஜி. பி. பெரேரா இல்லாத காலம். |
| 39. | திரு. பி. ரணதுங்க .. | கல்போடக் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமனறப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 6 | திரு. டி. பி. எல்லப்பொல இல்லாத காலம். |
| 40. | செல்வி ஆர். எல். த சில்வா | றைகம் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 2, 3, 7 | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள். |
| 41. | திரு. எ. எஸ். இகலகம .. | வடலவிலி அற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 17 | திரு. ஜீ. எஸ். வத்தகெதர இல்லாத காலம். |
| 42. | திரு. ஜி. கருணரட்ண .. | தெகிகம்பள்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1973 நவம்பர் 19, 20 | திரு. கே. ஜே. ஜே. பெரேரா இல்லாத காலங்கள். |
| 43. | திரு. சற். எ. எம். தாசிம் .. | இணைக்காதி, கொழும்பு வடக்கு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 நவம்பர் 22 விருந்து 15 தினங்கள் | கொழும்பு வடக்கு காதி மன்ற 7508, 7679, 906/ரி, 7602, 7574, 7603, 7575, 7576, 7577, 7578 ஆகிய இலக்க வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்கு. |
| 44. | திரு. ரி. பி. பஸ்ஸல .. | பதில், காதி, பதுளை நிர்வாக மாவட்டம், அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1973 நவம்பர் 16 விருந்து 15 தினங்கள் | அல்லது மறு அறிவித்தல் வரை. |

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை,
ஒழுக்காற்று சபை அலுவலகம்,
தபாற்பெட்டி 573,
சி/32, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 23 ந் உ.

12-9—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

# மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 563

டி. 251/ஆர். ஈ. சி. ரி. /1

**இலங்கைக் கடற்படை—அலுவலர்களின் உறுதிப்படுத்தல்கள்**

1973, யூலை 01 ஆம் திகதி முதல் சப்-லெஃப்ரினன்றுகள் ஆகக் கடவர் :

பதில் சப்-லெஃப்ரினன்ற் சி. ஏ. எம். ஜயமஹ, இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் எச். சி. ஏ. சி. திசேரு, இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் டி. கே. தஸநாயக்க, இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் டி. டபிள்யூ. சந்தகிரி, இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் என். டபிள்யூ. முசாஃபர், இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் எச். ஆர். அமரவீர, இலங். க. ப.
பதில் சப்-லெஃப்ரினன்ற் ரி. ஸற். பாகுஸ், இலங். க. ப.

1973, யூலை 01 ஆம் திகதி முதல் சப்-லெஃப்ரினன்ற் (ஈ) ஆகக் கடவர் :

பதில் சப்-லெஃப்ரினன்ற் (ஈ) எல். பி. ஆர். மெண்டிஸ், இலங். க. ப.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு நவெம்பர் 14 ந் வ.

12-135—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

1973 இன் இல. 564

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

வெயங்கொடை, வல்கமுல்லவில் வசிக்கும் தொன் எட்வின் நாலவத்த அபயசிங்க அவர்கள் கிரிந்திவெல்ல பிரதான அலுவலகத்திலும் வல்கமுல்ல மேலதிக அலுவலகத்திலும் கம்பஹா நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்நாட்டு, உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆடு நவெம்பர் மீ 15 ந் வ.

12-243—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

1973 இன் இல. 565

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

யாழ்ப்பாணம் மூன்றும் குறுக்குத் தெரு இலக்கம் 44 ல் வசிக்கும் இளையதம்பி சீவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாண நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆடு நவெம்பர் மீ 15 ந் வ.

12-246—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

1973 இன் இல. 566

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)**

பள்ளேபத்த, றன்வல வீதி, "மிஹிற" வில் வசிக்கும் புத்ததாச விதானகே அவர்கள் இரத்தினபுரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆடு நவெம்பர் மீ 15 ந் வ.

12—248—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

# அரசாங்க அறிவித்தல்கள்

*செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).*

*கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை*

*2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்*

*(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ், கீழ் மாகாணத்தினுள் திருகோணமலை மாவட்டத்தினுள் உள்ள வானல—இல் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.*

*12,39/1* —07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

*செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).*

*கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை*

*2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்*

*(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ் தென் மாகாணத்தினுள் காலி மாவட்டத்தினுள் உள்ள பெந்தொட்ட தேசிய விடுமுறை ஒய்வகத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுதியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*வி. ரி. ஜயசிங்ஹ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.*

*12,39/2* —07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).

**கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**

2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ், மேல் மாகாணத்தினுள் கொழும்பு மாவட்டத்தினுள் உள்ள பூகொட-இல் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.

12-39/3—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).

**கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**

2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ் வடமத்திய மாகாணத்தினுள் அனுராதபுர மாவட்டத்தினுள் உள்ள கஹடகஸ்திகிலிய—இல் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.

12-39/4—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).

**கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**

2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ், வட மாகாணத்தினுள் வவுனியா மாவட்டத்தினுள் உள்ள மாங்குளத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.

12-39/5—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

செ/பா. வெ. அ.—ஈ/பி. 20/74 (60).

**கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**

2 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(20 ஆம் அத்தியாயமான) கிறிமினல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 2 ஆம் பிரிவின்கீழ் வட மாகாணத்தினுள் மன்னார் மாவட்டத்தினுள் உள்ள முருங்கனில் நிறுவப்பட்டுள்ள பொலிசுக் களத்தை அரசாங்கமானது ஒரு பொலிசு நிலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, நொவெம்பர் 20 ஆம் திகதி.

12-39/6—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

சங்கங்கள் கட்டளைச் சட்டம்

(123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம், 4 ம் பிரிவுகளால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சராகிய ரிக்கிரி பண்டா இலங்கரத்தின ஆகிய நான் இவ்வறிவித்தல் மூலம்—

(i) "கொழும்பு யங் வுமின்ஸ் ஹிண்டு அசோஷியேஷன்" என அறியப்படும் சங்கம் எதற்கெனத் தோற்றுவிக்கப்பட்டதோ அதே நோக்கம் அக்கட்டளைச் சட்டத்தின் தத்துவங்களும் வசதிகளும் அதற்கு நீட்டப்பட வேண்டிய நோக்கம் ஒன்றாக அதிகாரமளிக்கிறேன்; அத்துடன்,

(ii) மேற்கூறிய சங்கத்துக்கு அக்கட்டளைச் சட்டத்தின் 5 (4) என்னும் பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களித்தல் மூலம் மேற்கூறிய சங்கத்துக்கு அந்தக் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகும் அளவை வரையறுக்கிறேன்.

ரி. பி. இலங்கரத்தின,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
1973 நொவெம்பர், 24.

12-65—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

**1958 ம் ஆண்டின் 15-ம் இல. ஊழியர் சேமநிதி அதிகாரச் சட்டம்**

மேன்முறையீட்டு மன்றம் அமைத்தல்

1958 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 31 ந் தேதி வெளிவந்த 11,573 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமான 1958 ம் ஆண்டு ஊழியர் சேமநிதி ஒழுங்குவிதிகளின் 47 ம் ஒழுங்கு விதியால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, தொழில் அமைச்சர் மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்தன ஆகிய நான்—

(அ) 1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதி அதிகாரச் சட்டத்தின் 29 ம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள மேன்முறையீட்டு மன்றத்தில் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் தேதி தொடக்கம் அங்கம் வகிப்பதற்கு, இத்னகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவர்களையும்,

(ஆ) தலைவராகக் கடமையாற்றுவதற்கு, மேன்முறையீட்டு மன்றத்தின் அங்கத்தவராகிய எயூஜின் றெயினுல்ட் த பொன்சேகா என்பவரையும் இத்தால் நியமிக்கின்றேன்.

எம். பி. த இசற். சிறிவர்த்தன.
தொழில் அமைச்சர்.

1973. நவம்பர் 22,
கொழும்பு.

அட்டவணை

(1) எயூஜின் றெயினுல்ட் த பொன்சேகா
(2) பேட்டி கொஸ்வத்த
(3) ஜெரூட் ஈவன் அமரசிங்க
(4) ஹரி சமரநாயக்க
(5) டலவெல்ல குறுகண்டகே தயாரத்ன

12-8—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**இலங்கை அரசியலமைப்பு—1972**

*இலங்கை அரசியலமைப்பின் 116 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை—அரச உத்தியோகத்தர்களது நியமனம்*

**கட்டளை இல. I**

இலங்கை அரசியலமைப்பின் 116 ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சர், லெஸ்லி சைமன் குணவர்த்தனு ஆகிய நான் அமைச்சரவையின் ஒருங்கிணைவுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப இவ்வட்டவணையின் நிரல் 1 இல் குறிக்கப்பட்டுள்ள திணைக்களங்களில் ஆண்டொன்றிற்குத் தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்கு குறைவாகப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் யாவரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தர் ஒருவரைத் தவிர்த்து) நியமனம் செய்யும் தத்துவத்தினை இவ்வட்டவணையின் நிரல் 2 இல் குறிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கிறேன்.

(அ) இத் தத்துவங்கள் அமைச்சரவையினால், பொது நிருவாகத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அல்லது என்னால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகளுக்கிணங்க பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) எவ்வாறுயினும், இலங்கை அரசியலமைப்பின் 116 ஆம் பிரிவின் பிரகாரம் அத்தகைய உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய நியமனத்திற்கான தத்துவம் என்னால் பிரயோகிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானிக்கும் பட்சத்தில் அத்தகைய உத்தியோகத்தர் அவ்விடயத்தில் அத் தத்துவத்தினை பிரயோகிக்கலாகாது.

போக்குவரத்து அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1.

லெஸ்லி குணவர்த்தனு,
போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| 1 | 2 |
|---|---|
| போக்குவரத்து அமைச்சின் காரியாலயம் | செயலாளர், போக்குவரத்து அமைச்சு |
| புகையிரதத் திணைக்களம் | புகையிரதப் பகுதிப் பொது முகாமையாளர் |
| சிவில் வான்செலவுத் திணைக்களம் | சிவில் வான்செலவுப் பணிப்பாளர் |
| மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் |

12-49/1—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

**இலங்கையின் அரசியலமைப்பு—1972**

*இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை—அரச உத்தியோகத்தர்களின் வேலை நீக்கமும் ஒழுங்காற்றுக் கட்டுப்பாடும்*

**கட்டளை இல. II**

இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் பிரகாரம் போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தனு ஆகிய நான் அமைச்சரவையின் ஒருங்கிணைவுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப இத்துடனுள்ள இவ்வட்டவணையின் நிரல் 1 இல் குறிக்கப்பட்டுள்ள தத்துவங்களை இவ்வட்டவணையின் நிரல் 2 இல் குறிக்கப்பட்டுள்ள போக்குவரத்து அமைச்சுக் காரியாலயத்தில் அரச உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கிறேன்.

(அ) இத்தகைய தத்துவங்கள் அமைச்சரவையினால், பொது நிருவாகத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினால் அல்லது என்னால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகளுக்கிணங்கப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) எவ்வாறுயினும், இலங்கை அரசியலமைப்பு 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம், அத்தகைய உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தண்டனை விதிக்கும் தத்துவம் என்னால் பிரயோகிக்கப்படல் வேண்டுமென நான் தீர்மானிக்கும் பட்சத்து அத்தகைய உத்தியோகத்தரினால் அவ்விடயத்தில் பிரயோகிக்கப்படல் ஆகாது.

2. என்னால் கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் தத்துவத்தின் பிரகாரம் வேலைநீக்கக் கட்டளை உட்பட ஒழுக்காற்று விடயம் தொடர்பான கட்டளையினால் துன்புறும் அரச உத்தியோகத்தர் ஒருவர் தேவையானவிடத்து அரசியலமைப்புத் திட்டத்தின் பிரிவு 119 (2) இன் பிரகாரம் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபைக்கோ அன்றி பிரிவு 119 (3) இன் கீழ் எனக்கோ மேன்முறையீடு செய்யலாம்.

லெஸ்லி குணவர்த்தனு,
போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| 1 | 2 |
|---|---|
| (1) போக்குவரத்து அமைச்சின் காரியாலயத்தில் ஆண்டொன்றுக்கு தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்கு குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலையிலிருந்து இடைநிறுத்தஞ் செய்வதற்கு, அல்லது நிறுத்துவதற்கு, கண்டிப்பதற்கு, ஒருவாரச் சம்பளத்திற்கு மேற்படாத அபராதம் விதிப்பதற்கு, கடுமையாகக் கண்டிப்பதற்கு அன்றி ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப் பகுதிக்கு சம்பள ஏற்றத்தினை இடை நிறுத்துவதற்கு, நிறுத்துவதற்கு அன்றிப் பிற்போடுவதற்கான தத்துவம் | போக்குவரத்கு அமைச்சின் செயலாளர், போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| (2) போக்குவரத்து அமைச்சின் காரியாலயத்தில் ஆண்டொன்றிற்கு தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்கு குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலைநீக்கஞ் செய்வதற்கு, வேலையிலிருந்து நிறுத்துவதற்கு, திறமையின்மைக்காக இளைப்பாற்றுச் செய்வதற்கான தத்துவம் | போக்குவரத்கு அமைச்சின் செயலாளர், போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் |

12-49/2—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## இலங்கையின் அரசியலமைப்பு—1972

இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை—அரச உத்தியோகத்தர்களின் வேலை நீக்கமும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும்

### கட்டளை இல. 3

இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் பிரகாரம், போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தன ஆகிய நான் அமைச்சரவையின் ஒருங்கிணைவுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப இத்துடன் உள்ள இவ்வட்டவணையின் நிரல் 1 இல் குறிக்கப்பட்டுள்ள தத்துவங்களை இவ்வட்டவணையின் நிரல் இரண்டில் குறிக்கப்பட்டுள்ள சிவில் வான் செலவுத் திணைக்கள அரச உத்தியோகத்தருக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கிறேன்.

(அ) இத்தகைய தத்துவங்கள் அமைச்சரவையினால், பொது நிர்வாகத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினால் அல்லது என்னால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக் கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகட்கிணங்க பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) எவ்வாறாயினும், இலங்கை அரசியலமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம், அத்தகைய உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தண்டனை விதிக்கும் தத்துவம் என்னால் பிரயோகிக்கப்படல் வேண்டுமென நான் தீர்மானிக்கும் பட்சத்தில் அத்தகைய உத்தியோகத்தரினால் அவ்விடயத்தில் பிரயோகிக்கப்படலாகாது.

2. என்னால் கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் தத்துவத்தின் பிரகாரம் வேலைநீக்கக் கட்டளை உட்பட ஒழுக்காற்று விடயம் தொடர்பான கட்டளையினால் துன்புறும் அரச உத்தியோகத்தர் ஒருவர் தேவையானவிடத்து அரசியலமைப்புத் திட்டத்தின் பிரிவு 119 (2) இன் பிரகாரம் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபைக்கோ அன்றி பிரிவு 119 (3) இன் கீழ் எனக்கோ மேன்முறையீடு செய்யலாம்.

போக்குவரத்து அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1.

லெஸ்லி குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| 1 | 2 |
|---|---|
| (1) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலையிலிருந்து இடைநிறுத்தஞ் செய்வதற்கு அன்றி வேலையிலிருந்து நிறுத்துவதற்கு, கண்டிப்பதற்கு ஒரு வாரச் சம்பளத்துக்கு மேற்படாத அபராதம் விதிப்பதற்கு, கடுமையாகக் கண்டிப்பதற்கு அன்றி ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப் பகுதிக்கு சம்பள ஏற்றத்தினை இடைநிறுத்துவதற்கு, நிறுத்துவதற்கு அன்றி பிற்போடுவதற்கான தத்துவம் | சிவில் வான்செலவுப் பணிப்பாளர் |
| (2) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்கு தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறையாத எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலை நீக்கம் செய்வதற்கு வேலையிலிருந்து நிறுத்துவதற்கு திறமையின்மைக்காக இளைப்பாற்றுச் செய்வதற்கான தத்துவம் | சிவில் வான்செலவுப் பணிப்பாளர் |
| (3) சிவில் வான் செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறையாத எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) கண்டிப்பதற்கு அல்லது ஒரு வார சம்பளத்திற்கு மேற்படாத அபராதம் விதிப்பதற்கான தத்துவம் | சிவில் வான்செலவுப் பணிப்பாளர் |
| (4) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்கு தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறையாத சம்பளம் பெறும், வானூர்தித் துணை ஏவுநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) கண்டிப்பதற்கு ஒரு வாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | வான்துறை ஏவுநர் |
| (5) சிவில் வான்செலவுத் திணைக்களத்தின் ஆண்டொன்றுக்கு தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்கு குறைவாகப் பெறும், பிரதம சைகை உத்தியோகத்தரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தர் தவிர்த்து) கண்டிப்பதற்கு, ஒரு வாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | பிரதம சைகை உத்தியோகத்தர் |
| (6) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும், இரேடியோ எந்திரியின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தர் தவிர்த்து) கண்டிப்பதற்கு ஒரு வாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | இரேடியோ எந்திரி |
| (7) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்க திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும், பிரதம தீயணைப்பு உத்தியோகத்தரது நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) கண்டிப்பதற்கு, ஒரு வாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | பிரதம தீயணைப்பு உத்தியோகத்தர் |
| (8) சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும், பிரதம வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டாளரது நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) கண்டிப்பதற்கு, ஒருவாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | பிரதம வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டாளர் |

### இலங்கையின் அரசியலமைப்பு 1972

இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை—அரச உத்தியோகத்தர்களின் வேலை நீக்கமும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும்

**கட்டளை இல. 4**

இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 119 (1) இன் கீழ் போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தன ஆகிய நான் அமைச்சரவையின் ஒருங்கிணைவுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப இதனகத்துள்ள அட்டவணையின் நிரல் 1 இன் குறிக்கப்பட்டுள்ள தத்துவங்களை இவ்வட்டவணையின் நிரல் 2 இல் குறிக்கப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அரச உத்தியோகத்தருக்கு அல்லது அரச உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கிறேன்.

(அ) இத் தத்துவங்கள் அமைச்சரவையினால், பொது நிருவாகத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினால் அல்லது என்னால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகட்கிணங்கப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) எவ்வாறாயினும், இலங்கை அரசியலமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம், அத்தகைய உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய உத்தியோகத்தரினால் அவ்விடயத்தில் பிரயோகிக்கப்படல் ஆகாது.

2. என்னால் கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் தத்துவத்தின் பிரகாரம் வேலைநீக்கக் கட்டளை உட்பட ஒழுக்காற்று விடயம் தொடர்பான கட்டளையினால் துன்புறும் அரச உத்தியோகத்தர் ஒருவர் தேவையானவிடத்து அரசியலமைப்புத் திட்டத்தின் பிரிவு 11 (2) இன் பிரகாரம் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபைக்கோ அன்றி பிரிவு 119 (3) இன் கீழ் எனக்கோ மேன்முறையீடு செய்யலாம்.

லெஸ்லி குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

போக்குவரத்து அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,

அட்டவணை

| 1 | 2 |
|---|---|
| (1) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலையிலிருந்து இடைநிறுத்தஞ் செய்வதற்கு, அன்றி நிறுத்துவதற்கு, கண்டிப்பதற்கு, ஒரு வாரச் சம்பளத்திற்கு மேற்படாத அபராதம் விதிப்பதற்கு, கடுமையாகக் கண்டிப்பதற்கு அன்றி ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப் பகுதிக்கு சம்பள ஏற்றத்தினை இடை நிறுத்துவதற்கு, நிறுத்துவதற்கு அன்றி பிற்போடுவதற்கான தத்துவம் | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் |
| (2) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தரைத் தவிர்த்து) வேலை நீக்கஞ் செய்வதற்கு, வேலையிலிருந்து நிறுத்துவதற்கு, திறமையின்மைக்காக இளைப்பாற்றுச் செய்வதற்கான தத்துவம் | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் |
| (3) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவிற்குக் குறைவாகப் பெறும் எவ்வரச உத்தியோகத்தரையும் (இணைந்த சேவைகள் எவற்றினதும் உத்தியோகத்தர் தவிர்த்து) தண்டிப்பதற்கு, ஒரு வாரத்திற்கு மேற்படாத சம்பளத்தினை அபராதமாக விதிப்பதற்கான தத்துவம் | மோட்டார் போக்குவரத்துப் பிரதி ஆணையாளர் |

12-49/4—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கக் கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டம்

1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கக் கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டத்தின் 46 (3) ம் பிரிவின்கீழ், தொழில் அமைச்சரவர்கள், இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அல்லது நடைமுறையிற் கொண்டுவருவதற்கான உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதற்கு 1973 ம் ஆண்டு திசம்பர் மாதம் 1 ந் தேதியன்று தொடக்கமாக நியமித்துள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 24 ந உ.

அட்டவணை

தொழில் வசதி உதவியாளர்கள்.
தொழிற் பகுப்பாய்வாளர்கள்.

12-144/1—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### கூலி நிருணய சபைக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 136)

(2 ம் அத்தியாயமாகிய) பொருள்கோடற் கட்டளைச்சட்டத்தோடு சேர்த்து வாசிக்கப்படும் (136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 52 ம் பிரிவின்கீழ், தொழில் அமைச்சரவர்கள், இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை (136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அல்லது நடைமுறையிற் கொண்டுவருவதற்கான உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதற்கு 1973 ம் ஆண்டு திசம்பர் மாதம் 1 ந் தேதியன்று தொடக்கமாக நியமித்துள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 24 ந உ.

அட்டவணை

தொழில் வசதி உதவியாளர்கள்.
தொழில் பகுப்பாய்வாளர்கள்.

12-144/2—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.*

*கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சர்.*

*கொழும்பு,*
*1973 நொவம்பர் 09.*

#### கட்டளை

1. *1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிக்குரிய காணி இடப்பரப்பானது தேசிய ஒதுக்கிடமொன்றாக இருத்தல் வேண்டுமென்று இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.*

2. *மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மேற் சொல்லப்பட்ட தேசிய ஒதுக்கிடத்தின் முழு இடப்பரப்பும் தேசிய பூங்காவொன்றாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.*

#### அட்டவணை

#### வில்பத்து தேசிய பூங்கா—தொகுதி எண் V

*வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம் புத்தளம் பத்து, எல்லைகள் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவு பொம்பரிப்பு பத்திலுள்ள 634 ஆம் இலக்க பூக்குள கிராம சேவகர் பிரிவிலும் 635 ஆம் இலக்க பொம்பரிப்பு கிராம சேவகர் பிரிவிலும் அமைந்துளதும் (வெள்ளமுண்டல் கிராமம்) கிடை ஆரம்ப பட எண் 25 இன் உட்படம் 1 இன் 2 ஆம் 3 ஆம் துண்டுகளும் (பூக்குளம் கிராமம்) கிடை ஆரம்ப படம் 12 இன் 11 ஆம் 12 ஆம் இலக்க உட்படங்களின் துண்டுகள் 17 முதல் 74 வரையும் (பாலுகாத் துறை கிராமம்) உட்படம் 9 இன் 16 ஆம் துண்டு பிற நீங்கலாக அண்ணளவாக 53,090 ஏக்கர் பரப்பை கொண்டுள்ளதும் பின் வரும் எல்லைகளையுடையதுமான நிலப்பரப்பு முழுவதும் :—*

**வடக்கு**—*கி.ஆ.ப. 12 இன் வடமேல் மூலையாக எடுத்துக் காட்டப்பட்ட குதிரை மலை முனையிலிருந்து தொடங்கும் வரை, சொல்லப்பட்ட படத்தின் வடக்கெல்லையாக அமைந்துள்ள கடலோரமாக பொதுவாக வடகிழக்கு முகமாக உப்பு ஆற்றின் பொங்குமுகத்தை அடையும் வரைக்கும், பின்னர் அங்கிருந்து சொல்லப்பட்ட அருவியின் இடது கரையோரமாக பொதுவாகக் கிழக்கு முகமாக புத்தளத்திலிருந்து மன்னாருக்கு செல்லும் வீதியை அது அடையும் வரைக்கும்.*

**கிழக்கு**—*கடைசியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து தொடங்கும் வரை சொல்லப்பட்ட ஆரம்ப படம் கி.ஆ.ப. 12 இன் கிழக்கெல்லையாக அமைந்துள்ள புத்தளத்திலிருந்து மன்னாருக்கு செல்லும் வீதியோரமாக பொதுவாக தென்மேற்காக தலைவில்லுக்கு செல்லும் வீதியை அது அடையும் வரைக்கும், தலைவில்லுக்கு செல்லும் சொல்லப்பட்ட வீதியோரமாக பொதுவாக வடகிழக்குமுகமாக ஏறத்தாள $1\frac{3}{4}$ மைல் தூரம் வரைக்கும் தென்கிழக்குமுகமாக ஏறத்தாள 1 மைல் தூரம் வரைக்கும் அது வில்பத்து தேசிய பூங்காவின் 11 ஆம் தொகுதியின் வடக்கெல்லையை அடையும் வரைக்கும், இது இ.கி.ஆ.ப. 3 இன் தெற்கெல்லையுமாகும். பின் அங்கிருந்து மேற்குமுகமாக ஏறத்தாள 35 சங்கிலி தூரம் கி.ஆ.ப. 25 இன் கிழக்கெல்லையை அது அடையும் வரைக்கும், இது நில எல்லை குறிக்கப்பட்ட வில்பத்து தெற்கு இடையான வலய எல்லையுமாகும். பின் அங்கிருந்து கி.ஆ.ப. 25 இற் சொல்லப்பட்ட கிழக்கெல்லை ஓரமாக தெற்கு முகமாக உத்தமடு ஆற்றை அது அடையும் வரைக்கும். பின் அங்கிருந்து முற்கூறிய அருவியின் வலது கரை ஓரமாக தெற்கு முகமாக அது கலா ஓயாவை அடையும் வரைக்கும்.*

**தெற்கு**—*கடைசியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து தொடங்கும் வரை கலா ஓயாவின் வலது கரை ஓரமாக பொதுவாக கிழக்குமுகமாக அது கருசடி ஆற்றை அடையும் வரைக்கும். அங்கிருந்து கலா ஓயா ஓரமாக பொதுவாக வடமேற்கு முகமாக வில்பத்து மேற்கு பாதுகாப்பிடத்தின் கிழக்கெல்லையானதுமான அருவியை அடையும் வரைக்கும், பின் அங்கிருந்து முற்கூறிய அருவி ஓரமாக பொதுவாக வடமேற்குமுகமாக அது கல் ஆற்றை அடையும் வரைக்கும். பின் அங்கிருந்து சொல்லப்பட்ட கல் ஆறு ஓரமாக வடமேற்குமுகமாக அது கடற்கரையை அடையும் வரைக்கும்.*

**மேற்கு**—*கடைசியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து தொடங்கும் வரை, கடற் கரை ஓரமாக வடக்குமுகமாக அது தொடங்கும் புள்ளி (குதிரைமலை)யை அடையும் வரைக்கும்.*

*12-2—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89.*

---

### 1954 ஆம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

49 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி வீடமைப்பு நிர்மாண அமைச்சர் பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

ஜீ எ பீ/பீ எல்/131
கொழும்பு,
1973 ம் ஆண்டு நொவம்பர் மீ 19 ந் உ.

#### அட்டவணை

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகரசபை எல்லைகளுக்குள்ளே அமைந்துள்ள பம்பலப்பிட்டி, காலி றோட்டில் 246 ம் வரிமதிப்பு இல. கொண்ட காணிக்குள்ளே 70 பேர்ச்சர்கள் கிட்டத்தட்ட விஸ்தீரணம் கொண்ட ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின் வருமாறு :—

வடக்கு : மெல்போண் மாவத்தை ;

கிழக்கு : காலி றோட்டு ;

தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;

மேற்கு : மெல்போண் மாவத்தையில் 15 ம், 15/1 ம், வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட காணி.

12–103—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

எஸ்.டி.—பி. 2/71.

### 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்வதற்கான சட்டம்

16 (2) (ஆ) (i) பிரிவின் கீழ் அறிவித்தல்

1971 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 16 (2) (ஆ) (i) பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிரதம அமைச்சரும், பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான் மேற்கூறப்பட்ட 16 ஆம் பிரிவின் கீழ், அடையாள அட்டையொன்றின் இணைப்படியொன்றை வழங்குவதற்கான கட்டணமானது ரூபா ஐந்து என இந்த அறிவித்தல் மூலம் நிர்ணயிக்கின்றேன்.

சிறிமா, ஆர். டி. பண்டாரநாயக்கா,
பிரதம அமைச்சரும்,
பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள்
அமைச்சருமானவர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 13 ந் உ.

12–282—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டம்

5 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110 ம் அத்தியாயமான) பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் 1959 ம் ஆண்டு ஒக்டோபர் 16 ம் திகதிய 11,902 இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூற் கடைசியாக திருத்தப்பட்டபடியான 1935 ம் ஆண்டு செப்டெம்பர் 20 ம் திகதிய 8,146 ம் இலக்க கசெற்றின் அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதன் அட்டவணையில் " கிழக்கு மாகாணம் —அம்பாறை மாவட்டம் " என்னும் தலைப்பின் கீழ் :—

(1) உகன பிரிவு சம்பந்தமான " 36 " ம் விடயத்திற்குப் பதிலாக அதற்கான " அ " என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள புதிய விடயத்தை இடுவதன் மூலமும்,

(2) கோனுகொல்ல பிரிவு சம்பந்தமான " 36அ " ம் விடயத்திற்குப் பதிலாக அதற்கான " ஆ " என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள புதிய விடயத்தை இடுவதன் மூலமும்,

(3) " 36அ " ம் விடயத்தை உடனடுத்து இதற்குள்ள " இ " என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள " 36ஆ " என்னும் புதிய விடயத்தை சேர்த்தல் மூலமும்

1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் திகதியிலிருந்து இவ்வறிவித்தல் மூலம் திருத்துகிறேன்.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 14 ந் உ.

அட்டவணை அ

36. பின்வரும் கிராமங்களையடக்கிய உகனைப் பிரிவு :—
ஹிமிடுறுவ
கஹட்டகசியாய
கொட்டலின்ட
கோமாரிய
மஹாக்கண்டிய
ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக் குடியேற்றத் திட்டக் கிராம இலக்கங்கள் 20 தொடக்கம் 24 வரையும்
உகனே

அட்டவணை ஆ

36 அ. பின்வரும் கிராமங்களையடக்கிய கோனுக்கல்லப் பிரிவு :—
வக்கியல்ல
வண்டாரதுவ
வொக்கப்பத்த
திவுலாண
கொணுக்கல்ல
ஹொகம்பான
பகுரு
பொறடுருவெல
ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபைக் குடியேற்றத்திட்ட கிராம இலக்கங்கள் 27 தொடக்கம் 34 வரையும், 36 ம், இலக்கக் கிராமமும்.
வெல்லயய

அட்டவணை இ

36ஆ. பின்வரும் கிராமங்களையடக்கிய பறஹால—நாமல் ஓயாப் பிரிவு
விவசாயச்சேனை முகாம்
ஹிமிடுறுவ தெற்கு
நாமல் ஓயா
பன்சாலகண்டிய
பொல்வத்த 110 வது பிரிவு
ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை குடியேற்றத்திட்ட கிராம இலக்கங்கள் 1 (வாவின்ன) 2. (பறஹாகல) 1 பி, தொடக்கம் 10 பி, கிராமங்களும்.
உஸ்லிம் பெடஸ்ச

12–107—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### விலங்கின தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) விலங்கினத் தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின்கீழ் கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீ. பி. ஜீ. கலுகல்ல,
கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நொவெம்பர் மீ 23 ந் உ.

கட்டளை

1. 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) விலங்கினத் தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிக்குரிய காணி இடப்பரப்பானது தேசிய ஒதுக்கிடமொன்றாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

2. மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மேலே சொல்லப்பட்ட தேசிய ஒதுக்கிடத்தின் முழு இடப்பரப்பும் தேசிய பூங்கா ஒன்றாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

அட்டவணை

தென்மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டம் மாகம்பத்துவிலுள்ள அண்ணளவாக 530 ஏக்கர் மொத்தப் பரப்பினையுடையதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான நிலப்பரப்பு முழுவதும் :—

வடக்கு : பொம்பொவ ஆர யோதகண்டிய—சிற்றுல்பாகுவ வீதியை ஊடறுக்கும் புள்ளியிலிருந்து கீறப்பட்ட வரை பொதுவாக வடகிழக்கு முகமாகச் சொல்லப்பட்ட வீதியோரமாக இறுதி ரோப்போ இடைப்படம் எண் 5 எஸ். பி. 40 ஆம் துண்டின் மேற்கெல்லையை அடையும்வரைக்கும்.

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து, ருகுணு தேசிய பூங்காவின் தற்போதைய எல்லையான இறுதி ரோப்போ இடைப்படம் எண் 5 எஸ். பி. யின் சொல்லப்பட்ட 40 ஆம் துண்டின் சொல்லப்பட்ட எல்லை யோரமாகத் தெற்கு முகமாக கீறப்பட்ட வரை நடவற்றிய ஆரவை அடையும்வரைக்கும், பின் அங்கிருந்து சொல்லப்பட்ட ஆரை ஓரமாகப் பொதுவாக தென்கிழக்கு முகமாக அது யால—பலற்றுபான வீதியை அடையும்வரைக்கும், பின் அங்கிருந்து மேற்கு முகமாக பலற்றுப்பான சந்தியை நோக்கி கிரிந்தைக்குச் செல்லும் வீதியை அடையும்வரைக்கும், பின் அங்கிருந்து பொதுவாக பலற்றுப்பன கிரிந்த வீதியோரமாகத் தெற்கு முகமாக அவ்வரை பொம்பொவ ஆரவை ஊடறுக்கும் புள்ளியை அடையும்வரைக்கும்.

தெற்கு : கடைசியாக சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து வரையப்பட்ட நேர்வரை மேற்குமுகமாக பலற்றுப்பான வாவியிலிருந்து அண்ணளவாக 4 சங்கிலிதென்மேற்காக பொம்பொவ ஆர அணையை அடையும்வரைக்கும், பின் அங்கிருந்து மேற்கு முகமாக பொம்பொவ ஆர ஓரமாக அவ்வரை இறுதி ரொப்போ இடைப்பட எண் 5 எஸ். பி. யின் 8 ஆம் துண்டின் மேற்கெல்லையைச் சந்திக்கும்வரைக்கும். இவ்வெல்லை திசமகாருமை யிலிருந்து யாலைக்குச் செல்லும் வீதியுமாகும்.

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து பொம்பொவ ஆறு ஓரமாக வடமேற்கு முகமாக அவ்வரை அந்நிலப்பரப்பின் வடக்கெல்லையின் ஆரம்பமுனையான யோதகண்டிய சிற்றுல் பாகுவ வீதியை அடையும்வரைக்கும்.

12–134—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டம்**

5 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் 1935 ம் ஆண்டு செப்தெம்பர் 20 ந் தேதிய 8,146 ம் இலக்க கசெற்றில் அநுபந்தத்திற் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட படியான அறிவித்தலை அதற்குள்ள அட்டவணையில் " வட மத்திய மாகாணம்—அனுராதபுர மாவட்டம் " என்னும் தலைப்பின் கீழ்,

(1) உலகல்ல கோறளை வடக்குப் பிரிவு சம்பந்தமான 23 ம் விடயத்திற்குப் பதிலாக இதற்குள்ள " அ " என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள விடயத்தை இடுவதன் மூலமும்,

(2) 23 ம் விடயத்தை உடனடுத்து இதற்குள்ள " ஆ " என்னும் அட்டவணையிற் தரப்பட்டுள்ள " 23அ " என்னும் புதிய விடயத்தை சேர்த்தல் மூலமும்,

1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் திகதியிலிருந்து இவ்வறிவித்தல் மூலம் திருத்துகிறேன்.

பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நொவெம்பர் மீ 14 ந் உ.

**அட்டவணை " அ "**

23. பின்வரும் கிராமங்களையடக்கிய திறப்பனே பிரிவு :—

அளுத்தாபெண்டிவெவ
அளுத்நீலக்கபட்டிய
அன்டறவெவ
பொறவெவ
பிராமணயாகம
டெமட்டேகம
அத்தவெட்டுணுவெவ
கொளுமறநன்குளம
பொளுபெற்றவெவ
கொளுபெற்றவெவ
குளுபெததவெவ
கபகுடாவெவ
கல்மில்லாகுளம
கத்தறெஸ்வெவ
கீன்மானத்தவெவ
இகலகொங்கஸ்வெவ
இகலமாவத்தவெவ
கறுவலகஸ்வெவ
கொந்தனயன் குளம
குடாகம
குடாவெவ
குஞ்சிகுளம
குசுவ
மாறகுளம
நாச்சாதுவ
நீலன்பட்டிய
பகலகொங்கஸ்வெவ
பகலமாவத்தவெவ
பளையகுளம
பட்டிகுளம
பெரியன்குளம
புளியன்குளம
புளியன்குளம
புஞ்சிகுளம
செலஸ்திமடுவ
செம்புகுளம
தம்மண்ணகொடவெவ
தறனகொல்லாவ
தொட்மடுவ
திறப்பனே
தித்தயாகம
உக்குலான் குளம
வீரப்புடிகுளம
வெல்லமுதாவ
வெத்தன்குளம

**அட்டவணை " ஆ "**

23அ. பின்வரும் கிராமங்களையடக்கிய உட்டிமடுவ பிரிவு:—

அலபத்துவெவ
அளுத்கம
அளுத்வெவ
அமணகட்டுவெவ
பெறண்டியாகம
பொறவெவ
டெமட்டேவெல
டெமட்டாவெவ
டெமட்டவெவகுடாவெவ
எலபத்வெவ
எறுவெவ
எத்தவிறவெவ
கலபிட்டவெவ
கல்கந்தேகம
கல்குளம
கல்குளம கடைவீதி
கல்வடுவாகம
கெற்றலகம
ஞானிகுளம
இகல கலபிற்றவெவ
இகல கல்குளம
இகல கிங்குறுவெவ
இகல புளியன்குளம
இகலவத்தேவெவ
இகலவெவ
இறகந்தகெட்டுவெவ
கதுறுகஸ்பிட்டிய
கறுவலகஸ்வெவ
கட்டுகெலியாவ
கிறிந்தேகம
கோன்வெவ
கோன்வெவ
கொலொன்கஸ்வெவ
குடாகம
குடாகனுமுல்ல
குடாசியம்பலான
குடாவெவ
கூறபையாவ
குருந்தன்குளம
குட்டிகுளம

மகாகெலேகம
மயிலகஸ்வெவ
மாவத்தவெவ
மீகஸ்வெவ
மெகிச்சாவ
முறியாகடவல
நபடவெவ
நீராவிய
நிக்கவெவ
ஒறுக்மான்குளம
படிகெட்டுவெவ
பகல கல்குளம
பயிறி மடுவ
பளுகுட்டியாவ
பெரிய குளம
புதுக்குளம
புளியன்குளம
றன்பாவெவ
சந்தணம் குட்டிகம
சியம்பலாவ
சோலையன்குளம
தலயாகம
தம்மன்னகம
தறணகொல்லாவ
ஊருகொட்டே
ஊட்டிமடுவ
வண்ணன்குளம

12-106—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

கட்டளை இல : 38

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம் 57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால் உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக் கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

பி. ஈ. 13/70 (39) சி. ஈ. சி. டபிள்யூ. எல்எ/8,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 16 ந் த.

**அட்டவணை**

இலங்கைத்தீவின் மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் நுகேகொடை கிராமாதிகாரிப் பகுதியிலுள்ள எத்துள்கோட்டே கிராம சேவகர் பகுதியில் 980/4 ம் விக்கிரமசிங்க அவனியுவிலுள்ள காணியின் பகுதியான 0 ஏ., 0 றூ., 16 பே. விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டுகள்.

வடக்கு : 980/3, மதிப்பீட்டு இலக்கம் கொண்ட காணி ;

கிழக்கு : விக்கிரமசிங்க அவனியு ;

தெற்கு : எத்துள்கோட்டே, பத்தரமுள்ள மெயின் வீதி ;

மேற்கு : பத்தரமுள்ள றோட்டிலுள்ள 25 மதிப்பீட்டு இலக்கங் கொண்ட காணி.

உரிமை கொண்டாடுபவர் : திருமதி எச். அக்னஸ் அமரசிங்க, இல. 64, செம்பிள் றோட், கொழும்பு 10.

12-226—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

**1958 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தேயிலை மானியச்சட்டம்**

1961 இன் 66 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1966 இன் 33 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1970 இன் 4 ஆம் இலக்கச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தேயிலை மானியச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தோட்டத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கொல்வின் ஆர். டி. சில்வா,
தோட்டத்தொழில் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு நொவெம்பர் 12 ந் த.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள், 1973 இன் தேயிலை மானிய ஒழுங்விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு 1973 நவம்பர் 3 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தேயிலைக்கட்டுப்பாட்டாளர் விடயத்துக்கேற்ப தேயிலைத் தோட்டத்தினது, தேயிலைச் சிறு பற்றுநிலத்தினது அல்லது தேயிலைத் தொழிற்சாலையினது உரிமையாளரால் அதற்கென எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில் அத்தகைய உரிமையாளருக்குப் பின்வரும் நோக்கங்களுக்காகத் தேயிலை மானிய நிதியத்திலிருந்து ஒரு மானியத்தை வழங்கலாம்.

(அ) அத்தகைய தேயிலைத் தோட்டம் அல்லது தேயிலைச் சிறு பற்றுநிலம் முழுவதிலும் அல்லது அதன் ஏதேனும் பகுதியில், புதிய முறை இனம்பெருக்கும் தேயிலைத்தடிகளைக்கொண்டு மீள்நடவு செய்தல் ;

(ஆ) அத்தகைய தேயிலைத்தோட்டம் அல்லது தேயிலைச் சிறு பற்று நிலம் முழுவதிலும் அல்லது அதன் குறிப்பிட்ட ஏதேனும் பாகத்தில் வளமாக்கிகளைக் கலத்தல் ;

(இ) அத்தகைய தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்பட்ட தேயிலையைப் பெட்டிகளில் அல்லது தேயிலைக் கட்டுப்பாட்டாளரால் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பான்களுக்குள் அடைத்தல்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழான மானியத்தைப் பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்துக்கெனத் தேயிலைக் கட்டுப்பாட்டாளரால் காலத்துக்குக்காலம் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய படிவத்தில் தேயிலைக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4. (1) ஒரு தேயிலைத் தோட்டத்தில் அல்லது தேயிலைச் சிறு பற்றுநிலத்தில் அல்லது அதன் ஏதேனும் குறிப்பிட்ட பகுதியில், 1973 நவம்பர் 03 ஆம் தேதியன்றோ அதன் பின்னரோ வழங்கப்பட்ட மீள்நடுகை அநுமதிப்பத்திரத்தின் பலத்துடன் புதிய முறை இனம் பெருக்கும் தேயிலைத்தடிகளை மீள்நடவு செய்வதற்கெனக் கொடுபடற் பாலதான தொகை, மீள்நடவு செய்யப்படவுள்ள இப்பரப்பின் ஒவ்வோர் ஏக்கருக்கும் ரூபா 4,750 ஆக இருக்கும் என்பதோடு, பின்வரும் விதமாக ஏழு தவணைப்பணங்களாகக் கொடுக்கவும்படலாம் :—

(அ) ஒவ்வோர் ஏக்கருக்குமான முதலாவது தவணைப்பணமாகிய ரூபா 500 மீள்நடவு செய்யப்படவுள்ள இடப்பரப்பில் உள்ள தேயிலைச் செடிகளையும் அல்லது ஏனைய பயிர்களையும் வேரோடு பறித்தபிறகு கொடுக்கப்படலாம் ;

(ஆ) ஒவ்வோர் ஏக்கருக்குமான இரண்டாவது தவணைப்பணமாகிய ரூபா 750 மீள்நடவு செய்யப்படவுள்ள இடப்பரப்பிலுள்ள மண்ணானது தேயிலைக் கட்டுப்பாட்டாளர் குறிப்பிடக்கூடிய அத் தகைய காலத்துக்கு மறுசீரமைக்கப்பட்ட பிறகு கொடுக்கப் படலாம் ;

(இ) ஒவ்வோர் ஏக்கருக்குமான மூன்றாவது தவணைப்பணமாகிய ரூபா 750 தேவையான மண்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு கொடுக்கப்படலாம் ;

(ஈ) ஒவ்வோர் ஏக்கருக்குமான நான்காவது தவணைப்பணமாகிய ரூபா 1,000 மீள்நடவு நிறைவுற்ற பிறகு கொடுக்கப்படலாம்.

(உ) ஒவ்வோர் ஏக்கருக்குமான ஐந்தாவது தவணைப்பணமாகிய ரூபா 500 மீள்நடவு நிறைவுற்று ஓராண்டுக்காலம் கழிவதற்கு முந்தாமல் கொடுக்கப்படலாம் ;

(ஊ) ஒவ்வோர் ஏக்கருக்குமான ஆறாவது தவணைப் பணமாகிய ரூபா 500 மீள்நடவு நிறைவுற்று ஈராண்டுக்காலம் கழிவதற்கு முந்தாமல் கொடுக்கப்படலாம் ;

(எ) ஒவ்வோர் ஏக்கருக்குமான ஏழாவது தவணைப் பணமாகிய ரூபா 750 மீள்நடவு நிறைவுற்று மூன்றாண்டுக்காலம் கழிவதற்கு முந்தாமல் கொடுக்கப்படலாம்.

(2) உட்பிரிவு (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது மானியத்தவணைப்பணம், மீள்நடவு செய்யப்படவுள்ள இடப்பரப்பை மறுசீரமைத்தல் அவசியமில்லை என்று தேயிலைக்கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கொடுக்கப்படுதலாகாது.

(3) 1958 நவம்பர் 07 ஆம் தேதிய 11,579 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்டனவும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டனவுமான 1958 இன் தேயிலை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எப்படியி ருப்பினும், 1973 நவம்பர் 03 ஆம் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட மீள்நடவு அனுமதிச்சீட்டுக்கள் தொடர்பில் மேலே மொழிந்த தேதியன்று அல்லது அதன் பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டியதாக வரும் மானியத்தவணைப்பணங்கள் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் கொடுக்கப்படலாம்.

(4) மீள்நடவு செய்யப்படவுள்ள இடப்பரப்பு ஓர் ஏக்கருக்குக் குறைந் தாக இருக்கின்ற, அல்லது அத்தகைய இடப்பரப்பு ஓர் ஏக்கருக்குக் குறைவான ஒரு பகுதியை உள்ளடக்கியிருக்கின்ற ஏதேனும் விடயத்தில் கொடுபடற்பாலதான மானியத்தொகையைக் கணிக்கையில், அந்த இடப்பரப்பளவுக்கு அல்லது இடப்பரப்பின் பகுதிக்கு ஏற்புடையதான இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உட்பிரிவின் குறிப்பிடப்பட்ட வீதங்கள், இந்த இடப்பரப்பளவு அல்லது இடப்பரப்பின் பகுதி ஓர் ஏக்கருக்குக் கொண்டுள்ள அந்த விகிதசமத்தில் ஏற்புடையனவாகும்.

5. (1) நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் முதலாவது மானியத்தவணைப் பணம் வழங்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், எட்டாம் ஒழுங்குவிதியின்கீழ்த் தேயிலைக்கட்டுப்பாட்டாளரால் பிறப்பிக்கப்படும் பணிப்புக்களுக்கும், தேவைப்படுத்தல்களுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அல்லது தடை யீடுகளுக்கும் இணங்கியொழுகுதலும், மீள்நடவு செய்யப்பட்ட இடப் பரப்பை கமத்தொழிலுக்கான நன்னிலையில் வைத்திருத்தலும் அவருக்குக் கடமையாதல் வேண்டும்.

(2) மீள்நடவு அநுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ள ஓர் இடப்பரப்புத் தொடர்பில் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஒன்றோ பல வோவாய மானியத்தவணைப்பணங்கள் இன்னமும் கொடுக்கப்படாத வராயுள்ள தேயிலைத்தோட்ட உரிமையாளர் அல்லது தேயிலைச் சிறுபற்று நில உரிமையாளர், அவ்விடப்பரப்பின் ஏதேனும் பகுதியை அல்லது அது முழுவதையும், தேயிலைக்கட்டுப்பாட்டாளரின் முன்கூட்டிய அங்கீ காரத்துடனன்றி விற்றலோ வேறுவிதமாகக் கையாளுதலோ ஆகாது.

6. ஏதேனும் தேயிலைத் தோட்டம் அல்லது தேயிலைச்சிறுபற்றுநிலம் முழுவதிலும் அல்லது அதன் ஏதேனும் குறிப்பிட்ட பகுதியில் வளமாக் கியைக் கலப்பதற்கெனக் கொடுபடற்பாலதான மானியத்தொகை, அத்தகைய தோட்டத்தினது அல்லது சிறுபற்றுநிலத்தினது தேவைக் கேற்பத் தேயிலைக்கட்டுப்பாட்டாளரினால் தீர்மானிக்கப்படும் என்பதோடு ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒவ்வொன்றுக்கும் ஆகக்கூடியது 350 ரூபாவுக்கு மேற்படாத மானியமாகவும் இருக்கும். இந்த மானியமானது, தேயிலைக்கட்டுப்பாட்டாளரினால் பாதிவிலையில் அல்லது அமைச்சரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய வீதத்தில் வழங்கப்படும் வளமாக்கியின் வடிவத்தில் வழங்கப்படும்.

7. தேயிலைத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை அடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தேயிலைப் பெட்டிகளுக்காகக் கொடு படற்பாலதான மானியத் தொகையானது, அத்தகைய பெட்டி அடுக்குகள் ஒவ்வொன்றினதும் விலை மூன்று ரூபாவை என்ன தொகையால் விஞ்சுகின்றதோ அத்தகைய தொகையாக இருக்கும்.

8. ஒருமானியம் 4 ஆம் 6 ஆம் அல்லது 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் எவரேனும் ஆளுக்குக் கொடுபடற்பாலதாயிருக்கின்றவிடத்து அல்லது கொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து அத்தகைய ஆள் எழுத்திலான அறிவித் தல் மூலம் தேயிலைக் கட்டுப்பாட்டாளரினால் குறிக்கப்படக்கூடிய அத்த கைய காலத்துள், தேயிலைத் தோட்டத்தில் அல்லது சிறுபற்றுநிலத்தில் மீள்நடவு செய்தலை, அல்லது தேயிலைத்தோட்டத்தில் அல்லது சிறுபற்று நிலத்தில் வளமாக்கி கலப்பதை அல்லது தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை அடைத்தலை திருப்தியான முறையில் நிறைவேற்றும் நோக்கத்துக்குத் தேவையானவையெனத் தேயிலைக்கட்டுப் பாட்டாளர் கருதுவதும் அவரால் எழுத்து மூலத்தில் பிறப்பிக்கப் படுவனவுமான அத்தகைய பணிப்புக்களுக்கும் தேவைப்படுத்தல்களுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அல்லது தடையீடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

9. மானியம் அல்லது மானியத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஆள் 5 ஆம் அல்லது 8 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எதற்கும் இணங்கியொழுகத்தவறிவிட்டார் அல்லது அதனை மீறிவிட்டார் என்று தேயிலைக்கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து தேயிலைக்கட்டுப்பாட்டாளர் எழுத்திலான அறிவித்தல் ஒன்றைப் பிறப்பித்து, அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மானியத்தை அந்த அறிவித்தலிற் குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்துள் உடனடியாகத் திருப்பிச் செலுத்தும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம். இந்த ஒழுங்குவிதியின் கீழான அறிவித்தலொன்று விடுக்கப்பட்டவர் அக்கட்டளைக்கிணங்கியொழுகத்தவறுதலாகாது.

10. தேயிலைக் கட்டுப்பாட்டாளர், இவ்வொழுங்குவிதியின் கீழ் அவர்க்கு அளிக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் புரியும்படி அவர்கைப்பட்ட எழுத்து மூலம் தேயிலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்து அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

11. (அ) ஐந்தாம், எட்டாம் அல்லது ஒன்பதாம் ஒழுங்குவிதியின் ஏற் பாடுகளுக்கிணங்கியொழுக மறுக்கும் அல்லது தவறும் ; அல்லது

(ஆ) இந்த ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது வெளிப்படுத்தலில், முக்கியமான விபரத்தில் பிழையான தென அவருக்குத்தெரிந்த ஏதேனும் கூற்றைக்கொடுக்கின்ற ; அல்லது

(இ) மானியம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவராய் அல்லது அதனைப் பெறுபவராய் இருந்துகொண்டு பொய்யான ஏதேனும் தகவலை தேயிலைக் கட்டுப்பாட்டாளருக்குக் கொடுத்துதவுகின்ற—

ஆளொவ்வோருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதோடு, நீதிவான் முன்னிலையிலான சுருக்க விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறுமாதத்திற்கு மேற்படாத ஒருகாலத்துக்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

12. இவ்வொழுங்கு விதிகளில், " உரிமையாளர் " என்பது தோட்டம், அல்லது சிறு பற்றுநிலம் அல்லது தொழிற்சாலை தொடர்பில் வரும்போது 1957 இன் 51 ஆம் இலக்கத் தேயிலைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தின் கீழ் அத்தகைய தோட்டத்தின், சிறு பற்றுநிலத்தின், அல்லது தொழிற் சாலையின் உரிமையாளராகப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக்கருதப்படும் ஆள் என்று பொருளாகும்.

12–149—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

## இணக்கச் சபைகள் சட்டம்

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (7), 4 (3) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், அப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1972 ஆகத்து மாதம் 4 ஆந் தேதிய 19 ஆம் இலக்க கசெற்றறிவித்தல் மூலம் மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்வெல்லே கிராமசபையின் 1 தொடக்கம் 9 வரையும், 14 தொடக்கம் 18 வரையுமுள்ள வட்டாரங்களை உள்ளடக்கிய பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் உறுப்பினரும் தலைவருமான திக்வெல்லே, தேரேமூறேயைச் சேர்ந்த ஜி.எச்.எம். சார்ள்ஸ் சிறிநாத அவர்களை அப்பதவிகளிலின்றும் இத்தால் நீக்குகின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மீ 23 ந் உ.

12–195—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## இணக்கச் சபைகள் சட்டம்

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், அப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1973 ஆகத்து மாதம் 10 ஆந் தேதிய 72 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் (அ) பந்தியின் கீழ் குறிப்பிட்ட அநுராதபுர மாவட்டத்திலுள்ள கிழக்கு கடவத் கோரளை கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் (அ) 1, (ஆ) பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உடயாரேகே ஹேரத்காமி அவர்கள் எனுஞ் சொற்களுக்குப் பதிலாக உடயாரே வெல்விதானேகே ஹேரத்காமி அவர்கள் எனுஞ் சொற்களையும் (அ) பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட 30 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த முதலிஹாமிகே உக்குபண்டா எனுஞ் சொற்களுக்குப் பதிலாக ஹேரத்ஹாமிகே உக்குபண்டா எனுஞ் சொற்களையும் இவ்வதன்மூலம் இத்தால் திருத்துகின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 28 ந் உ.

12-194—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## இணக்கச் சபைகள் சட்டம்

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (7) என்னும் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், அப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1973 மே 4 ஆந் தேதிய 58 ஆம் இலக்க கசெற்றறிவித்தல் மூலம் மாத்தறை மாவட்டத்திலுள்ள தெய்யந்தர கிராமப்பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் உறுப்பினர் பல்லாவெல, மஹயாரம்பயைச் சேர்ந்த வி. ஜீ. டி. கரோலின் அவர்களை அப்பதவியினின்றும் இத்தால் நீக்குகின்றேன்.

ஆர். விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு நவம்பர் 23 ந் உ.

12–255—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1973 மே மாதம் 25 ஆந் தேதிய 61 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 5 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்திலுள்ள வாகே கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்திற்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. கிரிந்திவல, மத்தேகமையைச் சேர்ந்த ஹெட்டியாரச்சி வல்லம்புற டொன் ஸ்ரீவன் ஜயசுந்தர அவர்கள்.
2. கிரிந்திவல, பிங்கமுவ, நாரங்கஸ்பிட்டியைச் சேர்ந்த அலகியவன்ன மொஹொட்டி அப்புகாமிலாகே தர்மதாச அலகியவன்ன அவர்கள்.
3. கிரிந்திவல, கந்தகொல்ல, குட்டிவில்லையைச் சேர்ந்த ரன்ஹொட்டி பேடிகே அபேசேன அவர்கள்.
4. பப்பிலியவல, தங்கல்லையைச் சேர்ந்த தெபாகம கங்காணமலாகே ஏமிஸ்சிஞ்ஞோ அவர்கள்.
5. கிரிந்திவல, மில்லத்தேயைச் சேர்ந்த எதிரிசிங்க ஆரச்சிகே அகோரிஸ் எதிரிசிங்க அவர்கள்.
6. கிரிந்திவல, மத்தேகமயைச் சேர்ந்த ரணதுங்க ஆரச்சிகே தவ்லியெல் பெரேரா ரணதுங்க அவர்கள்.
7. பப்பிலியவல, அனுராகொடயைச் சேர்ந்த விலியம் பெரேரா அத்தனகொட அவர்கள்.
8. மண்டாவல, அனுராகொடயைச் சேர்ந்த அத்தனகொட கங்கானமலாகே நோமிஸ் அத்தனகொட அவர்கள்.
9. கிரிந்திவல, தியவாலயைச் சேர்ந்த டொன் குலசேன விக்கிரமசிங்க அவர்கள்.
10. கிரிந்திவல, தியவாலயைச் சேர்ந்த ஹீரலு பத்திரன்ன ஹலாகே நீதிவர்தன பெரேரா அவர்கள்.
11. பப்பிலியவல, கனிஹிகமயைச் சேர்ந்த வழிமுனி தேவகே சைமன் பிறேமரத்ன அவர்கள்.
12. பப்பிலியவல, வெரளுகம்பொலயைச் சேர்ந்த பின்னவல அப்புகாமிலாகே சாமின் அப்புகாமி அவர்கள்.
13. பப்பிலியவல, வெரளுகம்பொலயைச் சேர்ந்த பின்னவல அப்புகாமிலாகே தொன் ஏப்பிரகாம் அப்புகாமி அவர்கள்.
14. கிரிந்திவல, மைலவலானயைச் சேர்ந்த மான்கோட்டெ கங்கானமலாகே பீற்றர் ரூபசிங்க அவர்கள்.
15. பப்பிலியவல, "சிறிபல"யைச் சேர்ந்த கனேபொல ஆரச்சிகே றிச்சேட் பெரேரா விஜேசேகர அவர்கள்.
16. பப்பிலியவல, தங்கல்லயைச் சேர்ந்த பத்திரன்னஹலாகே டேவிட்சிஞ்ஞோ பத்திரன்னஹ அவர்கள்.
17. பப்பிலியவல, வேரஹரயைச் சேர்ந்த களஞ்சிதேவகே அகிலிஸ் கருணரத்ன அவர்கள்.
18. பப்பிலியவல, வேரஹரயைச் சேர்ந்த வனிகரத்ன முதியஞ்சேலாகே மெண்டிஸ் அவர்கள்.
19. கிரிந்திவல, ஹிஸ்ஸல்லயைச் சேர்ந்த கிரகல தேவகே ஜேடின் அவர்கள்.
20. கிரிந்திவல, மாஹல்லொலுவவைச் சேர்ந்த ரண்சிரி பதிரன்னஹலாகே கருணசீல அவர்கள்.
21. கிரிந்திவல, உடகமயைச் சேர்ந்த வருசமான பேடிகே ஜோன் அவர்கள்.
22. வதுறுகம, கன்னிமஹரயைச் சேர்ந்த முத்துகல ஆரச்சிகே தொன் ஹேமபால அவர்கள்.
23. வதுறுகம, இந்துறுகல்லயைச் சேர்ந்த ஜயகொடி ஆரச்சிகே நவரத்தின அவர்கள்.
24. வதுறுகமயைச் சேர்ந்த தொன் ஜேமிஸ் பல்லேவல அவர்கள்.
25. பப்பிலியவல, பன்ஹேகமயைச் சேர்ந்த இலங்ககோன் தசநாயககே நோமிஸ் தசநாயக அவர்கள்.

26. பப்பிலியவல, வல்பொலவைச் சேர்ந்த உடகந்தகே ஆரிய தாச அவர்கள்.
27. ரதாவான, ரதாவான வடக்கைச் சேர்ந்த வலேரா கீர்த்தி ரத்ன முதியஞ்சேலாகே இதோனிஸ் கீர்த்திரத்ன அவர்கள்.
28. ரதாவான, ரதாவான தெற்கைச் சேர்ந்த சம்மத்தப்பெரும மொகொட்டி அப்புகாமிலாகே பேட்டி சம்மத்தப்பெரும அவர்கள்.
29. கிரிந்திவல, போகஹவத்தையைச் சேர்ந்த முத்து முதலிகே பேமதிலக ஜயவர்த்தன அவர்கள்.
30. கிரிந்திவல, எல்லோவிற்றயைச் சேர்ந்த தொன் தேரிஸ் விக்கிரமசிங்க அவர்கள்.

(ஆ) கிரிந்திவல, மத்தேகமயைச் சேர்ந்த ஹெட்டியாரச்சி வல்லம்பு டொன் ஸ்ரீவன் ஜயசுந்தர அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 28 ந உ.

12-281—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டம்

49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, வீடமைப்பு நிர்மாண அமைச்சர், பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாகக் கீழ்க்காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 28 ந உ.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், 4 கிரவற்சின் பெ. இ. உ. பிரிவு, கடே வீதிய தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளதும் கிட்டத்தட்ட 3 றூ., 3 பே. விஸ்தீரணமுள்ளதுமான மெரின்சிகேவத்தை என்றழைக்கப்படுகின்ற ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : தெல்கஹா-கொறட்டுவ ;
கிழக்கு: தண்டக்கர-வலங்வேவத்தை ;
தெற்கு : வீரக்கடன-சிறப்பிற்றியாவத்தை ;
மேற்கு : தெல்கஹா-கொறட்டுவ.

12-250—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள கொழும்பில் வசிக்கும் செல்வி சகுந்தலா மோகினி அபயக்கோன் அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பாதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12—240—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள கல்கிசை, வட்டரப்பல வீதி இல. 89/1 ல் வசிக்கும் செல்வி சம்பந்தவாதுகே மாயா மங்கலிகா குசும்ராணி டி சில்வா அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12-241—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)

பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள மொறட்டுவையில் வசிக்கும் இராஜபக்ஸ அச்சில்லே பியதாச அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12-242—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள கொழும்பு 7, கிறகறிவீதி, இல. 25 ல் வசிக்கும் கிளடிஸ் ரஞ்சிதமலர் விசுவலிங்கம் அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி.சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12-244—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள களனி, தலுகமவில் வசிக்கும் குமாரகே சலமன் நந்தபால பெரேரா அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12-247—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள 165, முத்துவெல்ல மாவத்தை, கொழும்பு 15 ல் வசிக்கும் கங்காணம் பத்திரன்கே காமினி அபேவிக்ரம அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன ,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந உ.

12-245—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)**

காலி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில மொழியில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள கந்தவில்ல புஸ்சேயில் வசிக்கும் துப்பஹி பார்ப்பட்டி சில்வா அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள மொழியிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பி. சிறிவர்தன
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந் வ.

12–249—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

# வரவு செலவுத் திரட்டுகள்

**72.12.31 ஆந் திகதியின் போதான அலுவல்களின் வாக்குமூலம்**

| | இவ்வருடம் | | | கடந்தவருடம் | |
|---|---|---|---|---|---|
| | ஆரம்பச் செலவு | திகதிவரை மதிப்பிறக்கம் | புத்தகப் பெறுமதி | ஆரம்பச் செலவு | புத்தகப் பெறுமதி |
| **குறித்த இருப்பு சொத்துக்கள்** | | | | | |
| கட்டிடங்கள் | 6,16,334 | 77,838 | 5,38,496 | 6,16,334 | 5,52,304 |
| உபகரணம் | 1,59,693 | 65,729 | 93,964 | 1,53,287 | 97,394 |
| வாசிகசாலை | 35,928 | 18,994 | 16,934 | 32,689 | 17,119 |
| மொத்தம் | 8,11,955 | 1,62,561 | 6,49,394 | 8,02,310 | 6,66,817 |
| **முதலீடுகள்** | | | | | |
| இருப்புவைப்புப் பணம் | | 1,13,500 | | 1,05,610 | |
| சேமிப்பு வைப்புப்பணம் | | 73,164 | | 68,282 | |
| | | | 1,86,664 | | 1,73,892 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| வங்கி, பணப் பாக்கிகள் | | 1,39,523 | | 71,733 | |
| கையிருப்பிலுள்ள தபாற்பயிற்சி நெறிகள் | | 37,981 | | 46,713 | |
| அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய வழங்கு தொகை | | 15,000 | | 15,000 | |
| கிடைக்கக்கூடிய பயிற்சிநெறிக்கட்டணம் | | 14,030 | | 9,870 | |
| பதவியாளர் முற்பணம் | | 3,231 | | 1,165 | |
| முற்கொடுப்பனவுகளும் வைப்புப்பணமும் | | 3,167 | | 2,291 | |
| நடைமுறையில் கிடைக்கக்கூடியவை | | 2,350 | | — | |
| கையிருப்பிலுள்ள வெளியீடுகள் | | 2,324 | | — | |
| | | | 2,17,606 | | 1,46,772 |
| **மொத்த இருப்பு சொத்துக்கள்** | | | 10,53,664 | | 9,87,481 |
| **குறைந்த பொறுப்புகளும் ஏற்பாடுகளும்** | | | | | |
| அரசாங்கக் கடன் | | 3,00,000 | | 3,00,000 | |
| முற்பணமாக தபாற் பயிற்சி நெறிக் கட்டணம் | | 53,072 | | 18,528 | |
| நடைமுறைக் கொடுப்பனவுகள் | | 35,709 | | 30,548 | |
| முற்பணமாக அங்கத்தவர்களின் கட்டணம் | | 23,230 | | 27,160 | |
| தபாற் பயிற்சிநெறி ஒப்பந்தப்புகள் | | 7,920 | | 18,988 | |
| முற்பணமாக பரீட்சைக் கட்டணம் | | 5,550 | | 3,125 | |
| | | | 4,25,481 | | 3,98,349 |
| **தேறிய இருப்பு சொத்துக்கள்** | | | 6,28,183 | | 5,89,132 |

**பின்வரும் நிதிகளை பிரதிபலிக்கின்றன**

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| **நிறுவன நிதி :** | | | | |
| 72.12.31 ஐந்தொகை ஏட்டிற்கேற்ப | 5,30,685 | | 4,54,757 | |
| கூட்டுக : 1972 ற்கான மிகை (பக்.16) | 39,051 | | 75,928 | |
| | | 5,69,736 | | 5,30,685 |
| வெளியீட்டு நிதி : 1970 ல் உருவாக்கப்பட்ட நிதி | 65,000 | | 65,000 | |
| கழிக்க : சிங்கள புத்தகத்தின் மீதி செலவு | 6,553 | | 6,553 | |
| | | 58,447 | | 58,447 |
| ரூபா | | 6,28,183 | | 5,89,132 |

உரித்தாக்கப்பட்ட நிதிகள் (பக் 23)

| | |
|---|---|
| லாண்டர் பரிசு | 26,434 |
| பெக்பீ விஞ்ஞாபனம் | 11,411 |
| மொத்தம் ரூபா | 37,845 |

கே. சச்சிதானந்தா,
தலைவர்.

### கணக்குப் பரிசோதகரின் அறிக்கை

மேற்கூறப்பட்ட வாக்குமூலம் அனுவல்களைப் பரிசீலனை செய்து வருமான வாக்குமூலத்தை இணைத்திருப்பதுடன் எனது அபிப்பிராயத்தின்படி 1972 டிசெம்பர் 31 வரையிலான நிறுவனத்தினுடைய அனுவல்களின் முறையே உண்மையான நியாயமான நிலைமையையும் அத்திகதியின்போது முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்தையும் செலவையும் தருகின்றது.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 20 ந் உ.

சிசில் அரசகுலரட்ன,
பட்டயம் பெற்ற கணக்காளர்.

### 1972 ஆம் ஆண்டிற்கான வருமான வாக்குமூலம்

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| பரீட்சைகளிலிருந்து உதவு தொகைகள் (பக். 17) | | | | |
| கட்டணங்கள் .. .. .. .. | 1,50,950 | | 1,41,625 | |
| கழிவு : நேரடிச் செலவுகள் .. .. .. .. | 47,707 | | 41,718 | |
| | | 1,03,243 | | 99,907 |
| அங்கத்தவர்களிடமிருந்து உதவு தொகை (பக். 18, 19) | | | | |
| கட்டணங்கள் .. .. .. .. | 1,00,435 | | 94,490 | |
| கழிவு : நேரடிச் செலவுகள் .. .. .. .. | 28,552 | | 13,093 | |
| | | 71,883 | | 81,397 |
| பயிற்சியிலிருந்து உதவு தொகை (பக்கங்கள் 20, 21) | | | | |
| கட்டணங்கள் .. .. .. .. | 1,02,771 | | 90,399 | |
| கழிவு : நேரடிச் செலவுகள் .. .. .. .. | 70,184 | | 46,941 | |
| | | 32,587 | | 43,458 |
| சில்லறை வருமானம் : வைப்புப் பணத்தின் மீதான வட்டி .. .. | | 12,772 | | 12,716 |
| மொத்த உதவுதொகைகள் .. .. .. .. | | 2,20,485 | | 2,37,478 |
| கழிவு பொதுச் செலவுகள் (பக். 22) | | | | |
| சாதாரண பதவியாளர் .. .. .. .. | 1,08,273 | | 92,045 | |
| வளவுகள் .. .. .. .. | 24,622 | | 27,420 | |
| செய்த அறிவிப்பு .. .. .. .. | 29,142 | | 24,768 | |
| உபகரணம் .. .. .. .. | 13,146 | | 10,734 | |
| வாசிகசாலைப் புத்தகங்கள் .. .. .. .. | 3,423 | | 4,165 | |
| மற்றைய செலவுகள் .. .. .. .. | 2,828 | | 2,418 | |
| | | 1,81,434 | | 1,61,550 |
| மிகை ரூபா .. .. .. | | 39,051 .. | | 75,928 |

### 1972 ஆம் பரீட்சைகளிலிருந்து உதவு தொகை

| கட்டணங்கள் : | தொ | இவ்வருடம் ஆட்கள் | இவ்வருடம் பத்திரங்கள் | இவ்வருடம் ரூபா | கடந்த வருடம் ஆட்கள் | கடந்த வருடம் பத்திரங்கள் | கடந்த வருடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| இறுதி முழுப் பரீட்சை .. .. | 300 .. | 18 .. | 144 .. | 5,400 .. | 38 .. | 304 .. | 11,400 |
| இறுதி பாக பரீட்சை .. .. | 200 .. | 380 .. | 1,532 .. | 76,000 .. | 344 .. | 1,399 .. | 68,800 |
| இறுதி மிகுதி புத்திரங்கள் .. | 150 .. | 12 .. | 48 .. | 1,800 .. | 11 .. | 44 .. | 1,650 |
| இறுதி ஒற்றைப் புத்திரம் .. .. | 50 .. | 6 .. | 6 .. | 300 .. | 9 .. | 9 .. | 450 |
| மொத்த இறுதிப் பரீட்சை .. .. | | 416 .. | 1,730 .. | 83,500 .. | 402 .. | 1,756 .. | 82,300 |
| இடைப் பரீட்சை .. .. | 200 .. | 300 .. | 1,200 .. | 60,000 .. | 251 .. | 1,004 .. | 50,200 |
| பரீட்சிக்கப்பட்ட மொத்தம் .. | | 716 | 2,930 | 143,500 | 653 | 2,760 | 132,500 |
| தண்டக் கட்டணம் .. .. | | 89 .. | .. | 7,550 .. | 84 .. | .. | 9,125 |
| கழிவு : கழக மாணுக்கருக்கான உதவிப்பணம் .. .. | | 1 .. | .. | 100 .. | | | |
| மொத்த வருமானம் | | | | 150,950 | | | 141,625 |
| கழிவு: ஆய்ந்தறியப்பட்ட நேரடிச் செலவுகள் : | | | | | | | |
| 2,898 விடைத்தாள்களுக்கு புள்ளியிடுதற்கான தொ 7/50 | | .. | 21,735 .. | .. | .. | 20,220 .. | |
| அமைத்தலும் தரப்படுத்தலும் .. | | .. | 15,550 .. | .. | .. | 15,600 .. | |
| 26 நாட்களின் மீதி பரீட்சை நோக்குநர்களுக்கு .. | | .. | 650 .. | .. | .. | 510 ... | |
| பொறுப்புக்குள்ளாக்கப்பட்ட மொத்தக்கட்டணம் .. | | .. | 37,935 .. | .. | .. | 36,330 .. | |
| அச்சிடுதலும் எழுதுகருவிவகையும் .. .. | | .. | 10,857 | | .. | 6,958 | |
| அச்சக அறிவித்தல்கள் .. .. | | .. | 711 | | .. | 846 | |
| கழிவு : கடந்த பத்திரங்களின் விற்பனை .. | | .. | 1,796 .. | 47,707 .. | .. | 2,416 .. | 41,718 |
| வருமான வாக்குமூலத்திற்கு கொண்டு செல்லப்பட்ட உதவு தொகை | | | | 103,243 | | | 99,907 |

குறிப்பு 1 :—அபேட்சகர்கள்

| | பொருந்தி பயி லுதலின்போது | பொருந்தி பயி லுதலின்பின் | மொத்தம் |
|---|---|---|---|
| இறுதி | 114 | 302 | 416 |
| இடை | 261 | 39 | 300 |
| பரீட்சிக்கப்பட்டவர்கள் | 375 | 341 | 716 |
| தண்டம் | 30 | 59 | 89 |
| மொத்தம் | 405 | 400 | 805 |

குறிப்பு 2 :—பத்திரங்கள்

ஒன்று அல்லது பல கேள்விப்பத்திரங்களுக்குத் தோற்றிய அபேட்சகர்களுள் 32 வராமின்மையால் (1971 ல் 64) பதிவுசெய்யப்பட்டது.

குறிப்பு 3 :—தண்டத்திட்டத்தில் மாற்றம்

1972 ஜூன் வரையிலான முழு வராமின்மையும் மருத்துவ பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டால் 50% தண்டத்தையும் (மற்றைய பாட்சைக்கு 50% த்துடன்) மற்றும்படி 100% தண்டத்தையும் ஏற்படுத்தியது. 1972 டிசெம்பர் தொடக்கம் முழு வராமின்மையும் உடனடித்தண்டமாக ரூபா 50 ஐ ஏற்படுத்துவதுடன் மிகுதி மற்றைய பரீட்சைக்குப் பாவிக்கப்படாவிடில் தண்டமாகவுமிறுக்கப்பட்டது.

**1972 ஆம் அங்கத்தவ உரிமையிலிருந்து உதவுதொகை**

| | | இவ்வருடம் 1972 | | கடந்த வருடம் 1971 | |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்களின் கட்டணங்கள் | தொ | அங்கத்தவர்கள் | ரூபா | அங்கத்தவர்கள் | ரூபா |
| சாதாரண அங்கத்தவர்கள் | 125 | 377 | 47,125 | 313 | 39,125 |
| கௌரவமும் விசேடமும் | 5 | 3 | 15 | 3 | 15 |
| மொத்த புதுப்பித்தல்கள் | | 380 | 47,140 | 316 | 39,140 |
| சேர்ப்புகள் | 250 | 45 | 11,250 | 74 | 18,500 |
| மொத்த அங்கத்துவ உரிமை (குறிப்பு 1) | | 425 | 58,390 | 390 | 57,640 |
| பயிற்சி செய்வதற்கு சான்றிதழ் | 325 | 112 | 36,400 | 108 | 35,100 |
| புத்தாய்வு மாணக்கர்களின் பதிவு | 250 | 22 | 5,500 | 7 | 1,750 |
| புதுப்பித்தல் கட்டணங்கள் மீது பீக்ஸ் | | 2 | 135 | | |
| அபராதம் | | 1 | 10 | | |
| மொத்தம் | | | 1,00,435 | | 94,490 |

| | இவ்வருடம் 1972 | | கடந்த வருடம் 1971 | |
|---|---|---|---|---|
| கழிவு உறுதிப்படுத்தப்பட்ட நேரடிச் செலவுகள் : | | | | |
| கழக சஞ்சிகை (குறிப்பு2) | 8,009 | | 3,975 | |
| கூட்டங்களில் பானங்கள் | 5,287 | | 1,830 | |
| பொது விரிவுரைகள் | 4,324 | | 1,481 | |
| களியாட்டமும் விருந்தோம்பலும் | 3,013 | | 481 | |
| வருடாந்த அறிக்கை | 2,750 | | 2,570 | |
| பருவ இதழ்கள் | 1,744 | | 1,221 | |
| மாணக்கர் சங்கத்திற்கு நன்கொடைகள் | 1,500 | | 750 | |
| எழுதுகருவிகை | 330 | | 756 | |
| சட்டமுறைச் செலவுகள் | 105 | | 367 | |
| அங்கத்துவ ஆய் வகுப்புகள் (குறிப்பு 3) | 1,490 | 28,552 | 338 | 13,093 |
| வருமான வாக்குமூலத்திற்குத் கொண்டு செல்லப்பட்ட உதவுதொகை | | 71,883 | | 81,397 |

**உறுப்புரிமையிலிருந்தான உதவுதொகை மீதிலான குறிப்புகள்**

| | கூட்டாளிகள் | புத்தாய்வு மாணக்கர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| குறிப்பு 1 : உறுப்புரிமை | | | |
| 1971 இல் ஒப்பப்பணத்தர் | 307 | 83 | 390 |
| கழிவு 1971 இல் இறந்தவர் | 1 | 4 | 5 |
| 71.12.31 இல் உறுப்புரிமை | 306 | 79 | 385 |
| கழிவு : காலங்கடந்த உறுப்புரிமை | 5 | | 5 |
| 1972 இல் புதுப்பிக்கப்பட்டது | 301 | 79 | 380 |
| பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் | 45 | | 45 |
| இணையுரிமைகள் | 22 | 22 | — |
| 1972 இல் ஒப்பப்பணத்தர்கள் | 324 | 101 | 425 |
| கழிவு 1972 இல் இறந்தவர்கள் | — | 3 | 3 |
| 72.12.31 இல் உறுப்புரிமை | 324 | 98 | 422 |

| | இவ்வருடம் | | | கடந்த வருடம் |
|---|---|---|---|---|
| | தொ I | தொ II | மொத்தம் | |
| குறிப்பு 2 : கழக சஞ்சிகை | | | | |
| செலவு | 4,566 | 6,464 | 11,030 | 7,533 |
| கழிவு : விளம்பரங்கள் | 1,250 | 600 | 1,850 | 3,200 |
| தேறிய செலவு | 3,316 | 5,864 | 9,180 | 4,333 |
| கழிவு ஆண்டின்போது விற்பனை | | | 471 | 858 |
| கழிவு விளம்பரங்களுக்கு முன்பு | | | 8,709 | 3,475 |
| | | | 700 | 500 |
| தேறிய செலவு | | | ரூபா 8,009 | 3,975 |

| | இவ்வருடம் (5 ஆய் வகுப்புகள்) | | கடந்த வருடம் (3 ஆய் வகுப்புகள்) | |
|---|---|---|---|---|
| | இல. | ரூபா | இல. | ரூபா |
| குறிப்பு 3 : வரவு கட்டணம் | 271 | 4,258 | 135 | 3,375 |
| கழிவு நேரடிச் செலவு | | 4,143 | | 2,643 |
| உடனடி மிகை | | 115 | | 732 |
| கழிவு பதிவு செய்தலும் அச்சடித்தலும் | | 1,605 | | 394 |
| தேறிய செலவு | | 1,490 | | 338 |

**பயிற்சியளித்தற் தொழிற்பாடுகளிலிருந்து உதவுதொகை—1972**

| | தொ. | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|---|
| | | மாணுக்கர்கள் | ரூபா | மாணுக்கர்கள் | ரூபா |
| கட்டணங்கள் : | | | | | |
| இறுதி முழுவதும் | 400 | 5 | 2,000 | 16 | 6,400 |
| இறுதி பாகம் I | 225 | 64 | 14,400 | 103 | 23,175 |
| இறுதி பாகம் II | 175 | 96 | 16,800 | 91 | 15,925 |
| மொத்த இறுதி | | 165 | 33,200 | 210 | 45,500 |
| இடையான | 100 | 122 | 12,200 | 92 | 27,600 |
| பயிற்சி நெறிகளுக்கான மொத்தம் | | 287 | 45,400 | 302 | 73,100 |
| வெவ்வேறு பாடங்கள் | | 198 | 10,035 | 169 | 4,867 |
| விரிவுரைகளுக்கான மொத்தம் | | 485 | 55,435 | 471 | 77,967 |
| தபாற் பயிற்சி நெறி (குறிப்பு 1) | | 256 | 40,136 | 52 | 6,432 |
| பொருட்களின் பதிவு | 50 | 144 | 7,200 | 120 | 6,000 |
| மொத்தம் | | | 1,02,771 | | 90,399 |
| கழிவு ஆய்ந்தறியறியப்பட்ட நேரடிச் செலவுகள் : | | | | | |
| கல்வி பணிப்பாளரும் பதவியாளரும் | | 45,672 | | 41,674 | |
| கழிவு : அரசாங்க நன்கொடை | | 15,000 | | 15,000 | |
| கல்வி பதவியாளரின் தேறிய செலவு | | 30,672 | | 26,674 | |
| தபாற் பயிற்சி நெறி (குறிப்பு 2) | | 14,946 | | 3,480 | |
| விரிவுரையாளர்களின் கட்டணம் (குறிப்பு 3) | | 12,700 | | 10,825 | |
| அச்சக அறிவித்தல்கள் | | 9,369 | | 4,512 | |
| ஆட்சேர்ப்பு பயிற்சிநெறிகளும் பரீட்சையும் | | 2,240 | | 1,821 | |
| எழுதுகருவிவகை | | 450 | | 552 | |
| கழிவு : குறிப்புகளின் விற்பனை | | 193 | | 923 | |
| | | | 70,184 | | 46,941 |
| வருமான வாக்குமூலத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட நன்கொடை | | | 32,587 | | 43,458 |

பயிற்சியளித்த தொழிற்பாடுகளிலிருந்தான உதவுதொகை மீது குறிப்புகள்

| | இவ்வருடம் | | | கடந்த வருடம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆட்கள் | பாடங்கள் | ரூபா | ஆட்கள் | பாடங்கள் | ரூபா |
| **குறிப்பு 1 : தபாற் பயிற்சி நெறி வருமானம்** | | | | | | |
| பணிபயில்வோராகப் பிணைக்கப்பட்ட எழுதுநர் | 193 | 2,071 | 33,136 | 52 | 402 | 6,432 |
| மற்றவைகள் | 63 | 658 | 7,000 | | | |
| மொத்தம் | 256 | 2,729 | 40,136 | 52 | 402 | 6,432 |

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| | பாடங்கள் | ரூபா | பாடங்கள் | ரூபா |
| **குறிப்பு 2 : தபாற்பயிற்சி நெறி செலவு** | | | | |
| நேரடியாக விளைவிக்கப்பட்ட செலவின் மதிப்பீடு | 2,729 | 8,733 | 402 | 1,286 |
| பணிபயில்வோராகப் பிணைக்கப்பட்ட எழுதுநரைத் திருத்துதல் | 2,071 | 6,213 | 402 | 1,206 |
| சில்லறைகள் | | | | 988 |
| மொத்தம் | 2,729 | 14,946 | 402 | 3,480 |

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| குறிப்பு 3 விரிவுரையாளர்களுக்குக் கட்டணங்கள் : | விரிவுரைகள் | ரூபா | விரிவுரைகள் | ரூபா |
| இறுதி | 376 | 9,400 | 280 | 7,000 |
| இடையான | 132 | 3,300 | 153 | 3,825 |
| மொத்தம் | 508 | 12,700 | 433 | 10,825 |

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| குறிப்பு 4 ஆட்சேர்ப்பு பயிற்சி நெறி | விரிவுரைகள் | ரூபா | விரிவுரைகள் | ரூபா |
| விரிவுரையாளர்களின் கட்டணங்கள் | 61 | 1,525 | 56 | 1,400 |
| பரீட்சையும் சில்லறைகளும் | | 1,715 | | 4,210 |
| மொத்தம் | | 2,240 | | 1,821 |

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| குறிப்பு 5 : திருத்துதற்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கென முற்பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தபாற் பயிற்சிநெறிக் கட்டணம் | இல. | ரூபா | இல. | ரூபா |
| சமர்ப்பித்தலில் தங்கியிருக்கும் பாடங்கள் | 3,317 | 53,072 | 1,158 | 18,528 |
| கழிவு : கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 61 (மாணுக்கர்) | 14,030 | 43 | 9,870 |
| முன்பாகக் கிடைக்கப்பெற்ற தேறிய கிடைப்பு | | 39,042 | | 8,658 |

## பொதுச் செலவுகள்—1972

| | இவ்வருடம் | | கடந்த வருடம் | |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் : | | | | |
| ப. எ. நி. உட்பட வரும்படிகள் | 151,295 | | 133,500 | |
| கழிவு : கல்வி பதவியாளர் | 45,672 | | 41,674 | |
| பொதுப் பதவியாளரின் செலவு | 105,623 | | 91,826 | |
| விளம்பரங்களும் சில்லறைகளும் | 2,650 | 108,273 | 219 | 92,045 |
| செய்தியறிவிப்பு : | | | | |
| எழுதுகருவிவகை | 17,160 | | 14,446 | |
| தொலைபேசியும் தபாற்செலவும் | 11,982 | 29,142 | 10,322 | 24,768 |
| வளவுகள் : | | | | |
| மதிப்பிறக்கம் | 13,808 | | 14,162 | |
| மின்சாரம் | 5,216 | | 4,227 | |
| வீதங்கள் | 2,334 | | 2,334 | |
| காப்புறுதி | 1,208 | | 657 | |
| குத்தகை வாடகை | 1,076 | | 1,431 | |
| பேணல் | 980 | 24,622 | 4,609 | 27,420 |
| உபகரணம் : | | | | |
| மதிப்பிறக்கம் | 9,836 | | 9,118 | |
| பேணல் | 3,310 | 13,146 | 1,616 | 10,734 |
| வாசிகசாலைப் புத்தகங்கள் மதிப்பிறக்கம் | | 3,423 | | 4,166 |
| மற்றைய செலவுகள் : | | | | |
| சில்லறைகள் | 1,345 | | 806 | |
| வங்கி செலவுகள் | 315 | | 745 | |
| கணக்குப் பரிசோதனைக் கட்டணம் | 600 | | 600 | |
| பிரயாணம் | 518 | | 266 | |
| பணமதிப்புக்குறைப்பினல் ஏற்பட்ட இழப்பு | 50 | 2,828 | — | 2,417 |
| வருமான வாக்குமூலத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட மொத்தம் ரூபா | | 181,434 | | 161,550 |

## 31.12.72 இன் போது உரிமையாக வழங்கப்பட்ட நிதிகள்

### லாண்டர் பரிசு நிதி

| இருப்புச் சொத்துக்கள் | இவ்வருடம் சந்தைப் பெறுமதி | இவ்வருடம் புத்தகப் பெறுமதி | கடந்த வருடம் சந்தைப் பெறுமதி | கடந்த வருடம் புத்தகப் பெறுமதி |
|---|---|---|---|---|
| கம்பனிப் பங்குகள் | 5,062 | 17,905 | 7,175 | 17,905 |
| குறித்த இருப்பு சொத்துக்கள் | 4,586 | 4,586 | 4,485 | 4,485 |
| மொத்த முதலீடுகள் | 9,648 | 22,491 | 11,660 | 22,390 |
| வங்கிப் பாக்கி | 3,943 | 3,943 | 4,034 | 4,034 |
| மொத்தம் | 13,591 | 26,434 | 15,694 | 26,424 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி : | | | | |
| 1.1.71 வரை கூட்டுக .. .. .. .. | | 26,424 .. | .. | 26,131 |
| இடைக்கப்பெற்ற தேறிய வருமானம் .. .. .. | 710 | | 593 | |
| கழிக்க : கொடுக்கப்பட்ட பரிசுகள் .. .. .. | 700 .. | 10 .. | 300 .. | 293 |
| 72.12.31 இன் போது .. .. .. .. | | 26,434 | | 26,424 |

**சிறில் ஈ. பெக்பி விஞ்ஞாபன நிதி**

| இருப்புச் சொத்துக்கள் | இவ்வருடம் சந்தைப் பெறுமதி | இவ்வருடம் புத்தகப் பெறுமதி | கடந்த வருடம் சந்தைப் பெறுமதி | கடந்த வருடம் புத்தகப் பெறுமதி |
|---|---|---|---|---|
| அரசாங்கம் 5½% கடன் 1990/94 .. .. .. | 6,400 .. | 10,000 .. | 6,330 .. | 10,000 |
| வங்கிப் பாக்கி .. .. .. .. | 1,411 .. | 1,411 .. | 861 .. | 861 |
| மொத்தம் .. | 7,811 | 11,411 | 7,191 | 10,861 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி : | | | | |
| 72.1.1. இன் போது கூட்டுக .. .. .. | | 10,861 | | 10,311 |
| தேறிய வருமானம் .. .. .. .. | 550 | | 550 | |
| கழிக்க : கொடுக்கப்பட்ட பரிசுகள் .. .. .. | ஏதுமில்லை .. | 550 .. | ஏதுமில்லை .. | 550 |
| 72.12.31 இன் போது .. .. .. .. | | 11,411 | | 10,861 |

12–36—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

இல. எப்பீச./1/63.

**சுகாதாரத் திணைக்களம்—திருத்தியமைக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டணங்கள்**

1972 யூன் 9 ந் திகதியிட்ட இலங்கைக் குடியரசின் 11 ம் இலக்க வர்த்தமானியில் காணப்படும் 3.5.72 திகதியிட்ட எப்பீச/1/63 இலக்கங் கொண்ட எனது அறிவித்தலின் 3 ம் பந்தியின் (i) பிரிவில் காட்டிய பிரகாரம் அங்கொடை மனநோய் வைத்தியசாலையின் இரண்டாம் வகுப்பு வில்லாக்களில் இருக்கும் நோயாளிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன :—

மன நோய் வைத்தியசாலை, அங்கொடை.

வில்லாக்கள் வகுப்பு II.—ரூ. 7.50 நாளொன்றுக்கு.

மேற்கூறப்பட்ட கட்டணங்கள் 1973 நவம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து வழக்கிலிருக்கும்.

2. மேற்கூறப்பட்ட அறிவித்தலின் 3 ம் பந்தியின் (iv) ம் பிரிவில் கூறப்பட்ட வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டிய தொகைகளும் 1973 நவம்பர் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன :—

மனநோய் வைத்தியசாலை அங்கொடை.
வில்லாக்கள் வகுப்பு I.—ரூ. 500.00.
மனநோய் வைத்தியசாலை, அங்கொடை.
வில்லாக்கள் வகுப்பு II.—ரூ. 275.00.

3. மேற்கூறப்பட்ட அறிவித்தலின் 5 ம் பந்தியின் பிரகாரம் மனநோய் வைத்தியசாலையின் பணம் செலுத்தும் பகுதிகளில் உள்ள எல்லா வகுப்புகளுக்கும் 1972 ஆகஸ்ட் 1 ம் திகதியிலிருந்து கொடுக்கப்படும் மருந்துகளுக்குக் கொள்விலைக் கட்டணம் அறவிடப்படுமேயன்றி நாளொன்றுக்கு ரூ. 3/– என்ற முறையில் அறவிடப்படமாட்டாது.

எப். ஏ. விக்கிரமசிங்கா,
சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

சுகாதார அமைச்சு,
நிதிக்கிளை,
த. பெ. 584,
கொழும்பு 10,
1973 ம் ஆம் நவம்பர் மீ 7 ந் உ.

12–139—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

இல. : 453.

**1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்**

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராசகுரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை ("இணைக்கப்படும் சங்கங்கள்" எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் ("பிரதான சங்கம்" எனக்குறிக்கப்பட்டிருப்பது) 14.12.1973 தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு, 1973 ம் ஆம் நவம்பர் மீ 27 ந் உ.

**முதலாவது அட்டவணை**

இணைக்கப்படும் சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட இனியம கோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. | குலி 91 | .. 5.3.1971 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட கறந்தபத்துகோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் | குலி 92 | .. 5.3.1971 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட யாகம்பத்து கோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் | குலி 93 | .. 5.3.1971 |
| 4. | மட்டுப்படுத்தப்பட்ட உடுபத்தாவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் | குலி 94 | .. 6.3.1971 |

**இரண்டாவது அட்டவணை**

பிரதான சங்கம்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட பிங்கிரிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் | குலி 116 | .. 24.11.1973 |

12–170—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### இல்மக உற்சவம்—கதிர்காமம்—1973.12.08 தொடக்கம் 1973.12.10 வரை

தற்போது நாட்டில் பரவியுள்ள வாந்தி பேதி நோய் காரணமாக மேற் கண்ட உற்சவம் இவ்வருடம் கொண்டாடப்படமாட்டாது என்று பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இலங்கைக் குடியரசின் 73.11.09 திகதிய வர்த்தமானியில் இதுபற்றி வெளியிட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

எஸ். ஜே. சுமனசேகர பண்டா,
அரசாங்க அதிபர்,
மொனறாகலை மாவட்டம்.

கச்சேரி, மொனறாகலை,
1973 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ம் உ.

12–167—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

#### இருப்புப்பாதைக் கடவை பழுதுபார்த்தல

...ம்பனே, உலப்பனே ஆகிய இடங்களுக்கிடையிலுள்ள பிரதான இருப்புப் பாதையில் 78 மைல் 63 சங்கிலி 97 பேர்லாங்கில் அமைந்துள்ள ...ங்கபிட்டியா இருப்புப்பாதைக் கடவை பழுதுபார்த்தல்களின் பொருட்டு 73.12.15 ஆந் திகதி காலை 7.00 மணி முதல் மாலை 8.00 மணிவரை மோட்டார் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு ஓரளவு மூடப்பட் டிருக்கும். இக்காலங்களில் இருப்புப்பாதைக் கடவையினூடாகப் போக்கு வரத்து நடைபெறுவதற்கு இடமளிக்கப்படும்.

இவ்வீதி 73.12.15 ஆந் திகதி மாலை 8.00 மணி முதல் 73.12.16 ஆந் திகதி காலை 6.00 மணிவரை மோட்டார் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு முற்றாக மூடப்பட்டிருக்கும். பயணிகளைக் கொண்டு செல்வதற் கென இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

ஜே. பி. சேனாரத்ன,
பொது முகாமையாளருக்காக,
புகைவண்டித் திணைக்களம்.

12–254—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

#### இருப்புப்பாதைக் கடவை பழுதுபார்த்தல்

பதுத்தா வீதியின் மீது 28 ஆவது சங்கிலியில் மாத்தறை புகைவண்டி நிலையச்சாலையின் 98 மைல் 40 சங்கிலியில் அமைந்துள்ள இரு புகை வண்டி இருப்புப்பாதைக் கடவைகள் 22.12.73 ஆந் திகதி காலை 7.00 மணி முதல் 23.12.73 ஆந் திகதி மாலை 6.00 மணி வரை புதுப்பிக்கப் படும்.

இக் கடவைகள் 22.12.73 ஆந் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் 23.12.73 ஆந் திகதி காலை 6.00 மணி முதல் மாலை 2.00 மணி வரையும் ஓரளவும், 22.12.73 ஆந் திகதி மாலை 6.00 மணி முதல் 23.12.73 ஆந் திகதி காலை 6.00 மணி வரை முற்றாகவும் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு மூடப்பட்டிருக்கும்.

முற்றாக மூடப்பட்டிருக்கும் காலத்தில் சகல வாகனங்களும் நூபே-மாத்தறை ஊடாக மாத்தறை அக்குறஸ்ஸ வீதியையும் வல்பொலை-ஹக்மன் வீதியையும் பயன்படுத்த வேண்டும்.

ஜே. போல் சேனாரத்ன,
பொது முகாமையாளருக்காக,
புகைவண்டித் திணைக்களம்.

12–253—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் **பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 **மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல்** முடிவுறும்.

5. சகல **அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்** முற்பணம் **அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு,** அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | .. | .. | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | | விலை | | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 0 | 50 | .. | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 1 | 0 | .. | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 30 | .. | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 60 | .. | 0 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | 02.11.73 | வெள்ளி | .. | 26.10.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | .. | 09.11.73 | வெள்ளி | .. | 02.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 16.11.73 | வெள்ளி | .. | 09.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 23.11.73 | வெள்ளி | .. | 16.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 30.11.73 | வெள்ளி | .. | 23.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| **திசெம்பர்** | .. | 07.12.73 | வெள்ளி | .. | 30.11.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.12.73 | வெள்ளி | .. | 07.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.12.73 | வெள்ளி | .. | 14.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.12.73 | வெள்ளி | .. | 21.12.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.